REGISTERED NO. M. 1454, தனிப்பிரதி அணா 2



# நாடார்குலமித்திரன்

# THE NADAR KULA MITRAN.

நாடார்குல மித்திரன் சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு வருடம் 1-க்கு ரூ 3-8-0.

சிங்கப்பூர், பினங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டிற்கு வருடம் 1-க்கு ரூபா 4-0-0.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப் பிரசங்க சபையினின்று

வெளிவரும்

## மாதம் மும்முறைப் பதிப்பு.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" (திருக்குறள்)

சுதந்திரம்! சமத்துவம்!! சகோதரத்வம்!!!

நாடார்குல மித்திரன் விளம்பர விகிதம்.

கலம் 1-க்கு தடவை 1-க்கு ரூபா 6-0-0.

சில்லரை விளம்பரம் அங்குலம் 1-க்கு ரூ 0-4-0

நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு

பத்திராதிபர், சு. ஆ. முத்துநாடார் பத்திராசிரியர்

மலர் 4.] [illegible] தை மீ [illegible] (அருப்புக்கோட்டை.) 19[illegible] பிப்ரவரி 11உ [ இதழ் 17.

## சௌந்தரகாந்தி.

இது ஒரு

புதிய நாவல் இனிய நாவல்

மதியைவிளக்கி மகிழ்ச்சியைத் தரும் நாவல்!!!

[இஃது திருமலையப்பபுரம், பா. பி. இரத்தினபாண்டிய ரவர்களால் எழுதப்பெற்றது.]

பாண்டிய பரம்பரையைப்பற்றியும். பாண்டிய மன்னர்களின் ஆட்சி முறையைப்பற்றியும் தெளிவாய் நாவல்ரூபமாய், சொற்சுவைபொருட்சுவையோடுமுதல்முதல் வெளிவந்த தமிழ் நாவல்இதுவே. கற்றோரும். மற்றோரும் கவர்ந்து கொண்டாடப்பெற்றது ஆண். பெண் இருபாலருக்கும் அருமையான பெருமையைத்தரும் பேர்பெற்றது. படிக்க புத்தியையும். பார்க்க பிரியத்தையும் தரும் சக்திபெற்றது. ஆசிரியர் பட்டத்தோமெ கூ. பதி.

இதன் விலை அணா 12. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

நாடார்குலமித்திரன் ஆபீஸ்,
அருப்புக்கோட்டை.

---

## அமரர் புராணம்.

ஒப்புயர் குலாபிமானியாய் சர்க்காரில் உயர்ந்த உத்தியோகம் வகித்துக் காலஞ் சென்ற மேதாவி G. S. கொர்நேலியூஸ் நாடார் அவர்கள் இயற்றிய அரிய நூல். சான்றோர் குலப் பெருமையை வெகு தெளிவாக எடுத்து விளக்கிக் காட்டுவது. இதன் அருமை பெருமைகளைப் பாராட்டாதவர் எவரும் இல்லை 500 பக்கம் கொண்ட பெரிய புஸ்தகம் சில பிரதிகளே கையிருப்பு. விலை ரூ 2—8—0 தபால் செலவு பிரத்தியேகம்.

விலாசம்.—

ஸ்ரீமதி பூரணம் கொர்நேலியூஸ் அம்மாள்,
நாசரேத்து P. O. திருநெல்வேலி ஜில்லா.

---

அநேகபத்திரிகைகளாலும் கற்றோர்களாலும் நன்கு மதிக்கப்பட்டது எது?

## ஆநந்தமகிளா.

அநேக சித்திரப் படங்களுடன் கூடியது. மூன்றாம் பதிப்பு.

இச் சிறந்த புஸ்தகம் ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயம் இருக்கவேண்டிய பல நூல்களில் ஒன்று. இதில் ஸ்திரீ புருஷர்களின் அவயவ அமைப்புகள், பொருத்தங்கள், உலக இன்பத்தையடையும் பல நல்வழிகள், தேகாரோக்கிய விதிகள், சந்தான சந்தோஷ ஹேதுக்களும் அவற்றையடையும் விதங்களும், பூர்வீக சந்தோஷ சல்லாப அநுஷ்டான முறைகளும் வெகு தெளிவாய் எடுத்துரைப்பது. விலை 1—8—0.

விலாசம் ஜி. எஸ் ஏஜென்ஸி, புதுவை.

---



## புதிய ஹோட்டல்.

ஐயா! தூத்துக்குடி யென்ற திருமந்திர நகரில் சாப்பாடு, காப்பி முதலியவைகள் தக்கவசதி மிக்க இல்லையென பலரால் சொல்லக் கேள்விப்பட்டு சௌகரியத்தை தர விருதுபட்டியிலிருந்து முன் வந்த எங்கள் 'நவீன சுகபோஜன சாலையை' இந்நகர் கீழூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரே மகா—ா—ா—ஸ்ரீ கனம் F. S பெரியசாமி அவர்கள் கட்டிடத்தில் ஸ்தாபனம் செய்திருப்பதால் சகல நாடார் கனவான்களும் உணவு அருந்தியெங்களை கௌரவப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இப்படிக்கு

புரொப்ரைட்டர்கள் விருதுபட்டி. { எஸ். எஸ். கருப்பையா நாடார், எஸ். ராமசாமி நாடார்

---

புதியசாலை! புதியசாலை!!

நாடார்குல மித்திரன்

## புத்தகசாலை.

புதுவருஷத்தைமுன்னிட்டு விலையைக் குறைக்கப்பட்டிருக்கிறது.

புத்தக விபரம்.

| | |
|---|---|
| அஸரியா நாடார் ஜீவிய சரித்திரம் | 0—8—0 |
| மகாமாயன் நாவல் | 0—8—0 |
| சௌந்திரகாந்தி நாவல் | 0—12—0 |
| அஸரியா நாடார் போட்டோ படம் | 0—3—0 |
| ஸ்ரீ முத்துமாரியம்மன் பதிகம் | 0—1—6 |
| நடராஜப் பதிகம் | 0—1—6 |
| ஸ்ரீ முத்துமாரியம்மன் திருவிழாச்சிந்து | 0—1—6 |
| செல்வரசக் கீர்த்தனை | 0—3—0 |
| நாடார் மகாஜன சங்கீத மஞ்சரி | 0—4—0 |
| 5-வது நாடார் மகாஜன சங்க கான்பரன்ஸ் ரிப்போர்டு | 0—4—0 |
| நமது குலத்தொழில் யாது | 0—5—0 |
| விகட வேசிகர்யாலை | 0—1—6 |

குறிப்பு:—8-அணாவுக்கு குறைவான விலையுள்ள புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்பட மாட்டாது. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

மொத்தமாக வாங்குவோர்க்கு தக்ககமிஷன் கழித்துக் கொடுக்கப்படும். விபரத்திற்கு எழுதவும். விலாசம்:—

நாடார்குல மித்திரன் "புத்தகசாலை"
நாடார் ஹைஸ்கூல் ரோடு,
அருப்புக்கோட்டை.

---

## இனம்! இனம்!!

படுக்கை அறையின்

அழகிய லீலா விநோத

## போட்டோ படங்கள்.

இருவருக்கும் ஆச்சரியமான சந்தோஷ சந்தோஷ சல்லாபங்களை யுண்டாக்கி ஆனந்தமயமாகச் செய்யும்.

| | |
|---|---|
| ½ டஜன்——விலை. | 2—8—0 |
| 12 படங்கள்—,, | 4—8—0 |
| 24 ,, ,, | 8—0—0 |
| 36 ,, ,, | 10—0—0 |

1 அணா ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு 1923-வது வருஷத்திய காலண்டரும், கேட்லாக்கும் இனாமாய் அனுப்பப்படும்.

எமதுவிலாசம்—

எம். ஜி. ராஜன் & கம்பெனி
74. திருப்பள்ளி தெருவு,
சௌக்கார்பேட்டை, மதராஸ்.

---

புதிய இங்கிலீஷ்

## சம்பாஷணைப் புஸ்தகம்.

மூன்றுமாத காலத்திற்குள் இங்கிலீஷில் சம்பாஷிக்கலாம். மூன்று பாகங் கொண்டது. இங்கிலீஷ் வாக்கியங்களுக்கு தமிழ் அர்த்தத்துடனும், ஒவ்வொரு பாடத்தின் அடியில் ஏராளமான அப்பியாசங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. புதிய போதனாமுறைகளை யனுசரித்து எழுதப்பட்டிருக்கின்றன. இம் மூன்று புத்தகங்களையும் படித்தால் 4-வது பாரத்தில் படிக்கும் மாணாக்கனை விட அதிகமாக இங்கிலீஷில் சம்பாஷிக்கலாம்.

1-ம் பாகம் விலை அணா 6, 2-ம் பாகம் அணா 8, 3-ம் பாகம் அணா 10. ஒவ்வொன்றுக்கும் வி. பி. செலவு அணா 6. பிரத்தியேகம்.

மானேஜர்; திருநாவுக்கரசு பிரஸ்
ஆரணி; N. A. Dt.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## இலங்கை வர்த்தமானம்

(நமது சொந்த நிருபரிடமிருந்து)

### மனிதவேட்டை.

மாத்தளை பக்கத்திலுள்ள நாலந்தா என்னுமிடத்தில் வசித்த கிராமவாசிகளிற் சிலர் வேட்டையாடப் போயினர். தங்களாற் கூடியமட்டும் பிரயாசப்பட்டும் ஒரு விலங்கினமும் கண்ணுக்குத் தென்படாமல், பொழுதுசாயும் நேரத்தில் காட்டுப் பன்றியொன்றைக் கண்டு அதைத் துரத்திச் சென்றார்கள். மூன்று செடிகளடர்ந்த இடவெளியில் இம்மிருகம் நழுவி இவர்களும் காட்டினுட் புகுந்தார்கள். மனிதர் ஒவ்வொருவராய்ப் பிரிந்துபட, ஒருவன் இலைகளின் அசைவை அங்கு உற்றுப்பார்த்து, முன்கண்ட பன்றிதான் காட்டினுள் ஊடுருவிச் செல்லுகிறதென, துப்பாக்கியை எடுத்துக் குறிபார்த்து, நொடியில் சுட்டுவிட்டான். விலங்கினம் விழுந்ததென்று விரைந்து போய்ப்பார்க்க, என்னே பரிதாபம்! [illegible] தன்னுடைய நெஞ்சை ஊடுருவிப் பாய்ந்ததாகக் கண்டான். மிருக வேட்டையாடப் போய் மனித வேட்டையாக முடிந்தது.

### புகைக்கூண்டு.

சின்னாட்களாக டேவில்ஜே என்னுமொரு இந்தியன் கொழும்பு நகரத்தைப் பிரமிக்கச் செய்துகொண்டிருந்தான். இவன் புகைக்கூண்டின் மூலமாக 5000 அடிக்குமேல் வானத்தில் அளாவச்சென்று, பின் உயரத்திலிருந்து கொண்டு புகைக் கூண்டை இழுத்துவிட்டு, தலை கீழாகக்குதித்து இரண்டு மூன்று சுழல்கள் சுழன்று, அச்சுழல்கள் [illegible] அவன் தோளில் வலதிரம்போல் தொங்கவிட்டிருக்கும் குடையொன்று திறந்து, பின்பு அதின்வழியாக சாதாரணமாக உட்கார்ந்துகொண்டு, காற்று எப்புறம் அடிக்கிறதோ அந்நேருக்கே போய் எங்கேயாவது ஒருவரும் நினையாத இடத்திலிறங்குவது வழக்கம். தன் உயிரை ஒரு பொருட்டாக எண்ணாமல் மேலேறுவதும் கீழிறங்குவதுமான தன்னுடைய அதிசயமான விளையாட்டை அமெரிக்கா, ஐரோப்பாமுதலிய தேசத்தவருக்குக் காண்பித்துவிட்டு அண்மையில் இவ்விலங்காத் வீபத்தில் வந்திறங்கினன். இந்து முதல் நாள் பலரும் மெச்சும்படியாய் ஆகாயத்தை யளாவப்போய் குடையின் மூலமாக ஒரு தெருவில் வந்திறங்கின து வியப்பைத் தரத்தக்கது. இரண்டாம் முறை சனிக்கிழமை மறுபடியும் ஆகாயத்திலுலாவ எத்தனிக்கையில் காற்றுப் போக்கு சரியில்லையென்று கும்பல் கும்பலாகக் கூடியிருந்த ஜனங்களை ஞாயிற்றுக்கிழமை $10\frac{1}{2}$ மணிக்கு வரச்சொல்லி, குறித்த அந்நேரத்தில் கூண்டு மேலெழும்ப 1000 அடிக்குமேல்போய் கூண்டை அறுத்துவிட்டு குடைமூலமாய்க் கீழிறங்கினன். அந்தோ! தரையில் வந்திறங்குவதற்குப் பதிலாக அகழ் நிறைந்த ஒரு குளத்திலிறங்க மேல்வர இயலாது, அமிழ்ந்துவிட்டான். அக்குளத்திலிருந்த பிரேதத்தை முதல் நாள் காணாமல் இரண்டாம்நாள் எடுத்து தகுந்த மரியாதையுடன் அடக்கம் செய்வித்தனர். இவனுக்கு சுமார் 33 வயது. இங்கே இவனுடைய விளையாட்டின் திறமையை மெய்க்காதவரொருவருமில்லை. மரணத்திற் கஞ்சாத இம்மானிடப் பிறவியின் அகால மரணத்தைவிட்டு யாமும் துக்கமடைய வேண்டியதே.

### காலநிலை.

உஷ்ணம் வரவர அதிகரிக்கிறது. ஒட்டுவா ரொட்டி வியாதிகளும் பரவுகின்றன. மூன்றுநாள் காய்ச்சலும் சிலவிடங்களில் நடக்கிறது. நம்மவர்களில் மு. இராஜமணி நாடார், கட்டையேறும் பெருமாள் நாடார் என்ற இரண்டு வாலிபர்கள் விண்ணுலகடைந்தனர். இவ்விருபேர் குடும்பத்தாருக்கும் இறைவன் ஆறுதலளிப்பாராக.

### ரயில்வே விபத்து.

மூன்றும் தடவையாக மறுபடியும் மதவாச்சிப் பக்கத்திலுள்ள பகோவுக்கு கனவந்தைக்கும் இடையில் பிரவாகம் மிகுதியால் தண்டவாளங்கள் அசைவுற இந்தியாவிலிருந்து கொழும்புக்கு வரும் மெயில், தண்டவாளங்களை விட்டு விலகினமையால் இஞ்சினும் முன்னணியில் கோர்க்கப்பட்ட ஆறு வண்டிகளும் மல்லாந்து விழுந்து நொறுங்கி விட்டன. 20 பேர் உயிர்துறந்தனர். 49 பேர் ஆஸ்பத்திரியிலிருந்து சுகமடைந்து வருகிறார்கள். இறந்தவர்களில் மிகுதியான பேர் இந்தியாவிலிருந்து தோட்டக்காட்டிற்குக் கூலிக்குப்போகும் கூலியாட்கள் மூன்றுவது வகுப்புப் பிரயாணிகள். தபால்கள் தூத்துக்குடி சப்பல் மூலமாய்ப் போய்க்கொண்டிருக்கின்றன, இந்த ரயில்பாதையில் அடிக்கடி அபாயகரமான ஆபத்துக்கள்நேரிடுவதால், நெடுங்காலம் நீடிக்கும் என்று சொல்வதற்கு மார்க்கமில்லை.

## ஸ்ரீகிருஷ்ண லீலை.

(விருதுநகர் [illegible])

(முன் தொடர்ச்சி)

மேற்றிசையிலிருந்து சூரியன் [illegible] [illegible] அதிலிருந்து [illegible] [illegible] லம் ஆரம்பித்தது. நீக்கோடைகாலமதில் நாமக்கிருஷ்ணர்கள் கோபால பாலகர்களுடன் பாண்டீர நாமதேய வடாரண்யத்தில் விளையாட்டில் விருப்பமுள்ளவர்களாக தமக்கிஷ்டமான விளையாடிக்கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் பசுக்களெல்லாம் பிரிந்து தங்களுக்கிச்சையான்படி சுயேட்சையாக பசும்புற்களை மேய்ந்துகொண்டு வெகு தூரஞ்சென்று மிகவுந்தாகத்தையும் தாபத்தையுமடைந்தனவாய்த் தவித்துக்கொண்டு [illegible] என்னும் அரண்யத்தைத் தாண்டிப்போயின. அப்போது பலராமாதியர்கள் முதலியகோபர்களெல்லாரும் பசுவினங்களைக் காணாமல் வருந்தி, விளையாட்டை யொழித்து பசுவினங்கள் சென்ற மார்க்கம் தெரியாமல் சில நேரம் நான்கு திக்குகளிலுந் தேடிக்காணாமல் நிமிஷமாத்திரத்தில் நானாவித வியாகுலத்தையடைந்து பல திசையிலும் ஓடியலைந்து பசுவினங்களின் குளம்படி அடையாளங்களைக் கண்டு அம்மார்க்கங்களைப் பிடித்து பலவாறாகத் தேடிப் பார்க்குமளவில் அந்தப்பசுக்கூட்டங்கள் முஞ்சாரண்யத்தில் வழிதெரியாமல் அம்மாவென்றலறும் சப்தங்களைக் கேட்டு தங்கள் தங்கள் பசுக்களைக் கண்டு பிடித்து ஒரே மந்தையாகச் சேர்த்து ஆயாசங்களை தீர்த்துக்கொண்டு திரும்பினர்கள். அத்தருணத்தில் கிருஷ்ணன் தம் திருவதரத்தில் புல்லாங்குழலை வைத்து ஊதிக்கொண்டே போனர். பசுக்கூட்டங்களெல்லாம் அக்கானத்தைக்கேட்டுக்கொண்டே மெய்மறந்து அவரைப் பின்பற்றி நடந்தன.

அந்தச் சமயத்தில் தெய்வீகமாக ஒரு காட்டுத் தீயானது உண்டாயிற்று. அங்கு வீசுங்காற்றின் வேகத்தால் நான்குப்பக்கங்களிலும் வியாபித்து எங்கும் புகைகளெழும்ப ஜ்வலித்து ஆகாயமளாவியெரிந்து எங்குஞ் சூழ்ந்து கொண்டன. அப்போது கோபாலகர்களெல்லாம் கோவென்றலற கிருஷ்ணனை வந்தடைந்தார்கள். பசுக்களும் நெருப்புஜ்வாலை பொறுக்கமுடியாமல் கண்ணனைப் பார்த்து அம்மா அம்மா வென்று அலறின. கபட நாடக சூஸ்திராவதாரியாகிய கண்ணபிரான் சகலரையும் கண்ணை மூடிக்கொள்ளும்படி கட்டளையிட்டார். அப்படியே பயபக்தியுடனே தங்கள் தங்கள் நேத்திரங்களை பொத்திக்கொண்டார்கள். யோகீஸ்வராகிய பகவான் தம்முடைய யோகவல்லமையால் தமது விராட்ஸ்வரூபத்தைவகித்து அந்தக் காட்டுத்தீயை அவலீலையாகப் பானஞ்செய்து, கோபாலர்களையும் கோவினங்களையும் ஒருக்ஷண நேரத்தில் முஞ்சாரண்யத்தைவிட்டு பாண்டீகமென்னப்பட்ட ஆலமரத்தடியில்கொண்டுவந்துசேர்த்து நேத்திரங்களை விழித்துப்பார்க்கும்படிசொன்னர். அவர்களும்விழித்துப்பார்த்து ஆனந்தமகிழ்ச்சிகொண்டு கிருஷ்ணனுடைய மாயாவினைதங்களைப் பலவாறு வர்ணனைசெய்து பகவானைப் போற்றினார்கள். பின் எல்லோரும் கோவினங்களை கூட்டிக் கொண்டு கோகுலத்துள் பிரவேசித்து போஜனாதிகளுணடு இராப்பொழுதைப் போக்கினார்கள்.

தற்காலம் யந்திரக் கருவிகளினுதவியால் அந்தரத்திற்பறக்கின்றார்கள். அக்காலத்திலோ யோக வல்லமையினாலே தன்னையும் தன்னைப்பற்றியமற்றவரையும் எவ்வுதவியுமின்றிக் கனமார்க்கத்திலெழும்பி க்ஷணநேரத்தில் நினைத்தவிடம் போய்ச் சேரக்கூடிய மகாதவசிரேஷ்டர்களா யிருந்திருக்கிறார்கள். பஞ்சேந்திரியங்களை வென்று திரிகால வர்த்தமானம் அறியும் சக்தியைப்படைத்த ஞானிகளாமகாவிருந்து கொண்டுஉலகத்தை ஆண்டுவருகிறார்கள். சுபம்.

(இன்னும் வரும்)

## கைத்தொழிலே செல்வம்!

(நாடார் ஜாதி [illegible] சபையிலிருந்து.)

இப்பூவுலகில் [illegible] வ்யாபாரத்துக்கும், தேச முன்னேற்றத்திற்கும், செல்வச்சிறப்பிற்கும் கைத்தொழிலே முதன்மையானதெனக்கூறலாம். ஒரு சாமானை வாங்கி அதையே மறுபடி விற்கும் வர்த்தகத்தில் இக்காலம் விசேஷலாபம் கிடைக்குமென்று சொல்ல முடியாது. பேரும் வர்த்தகத்தில் சிற்சில சமயங்களில் [illegible] நஷ்டங்களும் ஏற்பட்டுக்கொண்டிருப்பது சகஜமாக இருக்கிறது. கைத்தொழிலில் எப்பொழுதுமே நஷ்டம் வரமாட்டாதென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். ஜப்பான், ஜெர்மனி முதலிய தேசங்களும் கைத்தொழில் வன்மையினாலேயே உலகத்திலே நிகரற்ற தேசங்களாக மதிக்கும்படி பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. கைத்தொழிலானது இயற்கைப் பொருளைச் செயற்கைப் பொருளாகச் செய்வதேயாகும். உதாரணமாக பனைமரத்தின் தும்பு காலணா விலை பெறக்கூடியது மேல்நாடுகளுக்கனுப்பப்பட்டு மக்ருச்சியில் தகரத் தகடினால் பிணைக்கப்பட்டு புருஸ் என நாமம் புனைந்து இங்கும் வந்து நாலணாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதைப்போலவே பஞ்சானது நூலாகவும் வஸ்திரங்களாகவும், மணலால் கண்ணாடிச் சாமான்களும், களிமண்ணால் ஓடுகளும், மரங்களால் மேஜை, நாற்காலி, பெஞ்சு, பீரோ முதலிய சாமான்களும் இரும்பால் இயந்திரங்கள், கட்டடவேலைக்குறிய சாமான்களும் இன்னும் பற்பல சாமான்களை (மிக்ஸ்) கலவன் செய்து, பலமருந்துச் சாமான்களும், வாசனை எண்ணைகளும் சோப்புகள்களும், காகிதங்கள், ரப்பர், தகரம், மரம் முதலியவைகளைக் கொண்டு பல வகை விளையாட்டுச் சாமான்களும் செய்யப்படுகின்றன. இவைகளினால் அன்னிய நாட்டினர் நம்தேசத்திலிருந்து கொண்டுபோகும் லாபம் கணக்கு வழக்கில்லை. கணக்கெடுத்துப் பார்ப்போமாயின் மனம்புண்பட ஆரம்பிக்கும். இவ்விதம் அபரிமிதமான லாபத்தைச் சம்பாதிக்கும் அன்னிய நாட்டினரும் நம்மைப்போல மனிதர்களே. அவர்கள் செய்யக்கூடிய கைத்தொழில்களை நாம் விசேஷமாகக் கைக்கொள்ளாததிற்கு நம்முடைய முயற்சிக்குறைவே முக்கியகாரணமாகும். அன்னிய நாட்டினரைப் போன்று நாடார்களாகிய நாமும் பல தொழில்களையும் ஆரம்பித்துச்செய்யவேண்டியதே தற்காலம் நமது கோரிக்கைகளில் முக்கியமானது. கைத்தொழிலிலேயே நம் ஜனசமூகத்தின் அபிவிருத்தியும் முன்னேற்றமும் செல்வாக்கும், இழந்த பெருமைகளை மீண்டுமெளிக்கக்கூடிய சக்தியும் இருக்கிறதென்ற ரகசியத்தை ஒவ்வொருவரும் மனதிற்கொண்டு முக்கிய கவனம் செலுத்திகைத்தொழிற்சாலைகளை ஸ்தாபித்து நடத்துவோமாயின் பத்துவருஷத்தில் தென்இந்தியாவில் அநேக நாடார் கைத்தொழிற்சாலைகள் பிரகாசிக்கக் காணலாம். அதோடு நம் ஜனசமூகம் கைத் தொழிலில் ஜப்பான் தேசத்துடன் போட்டி போடக்கூடிய உயர்நிலைமையைக் கண்டிப்பாய் அடையக்கூடும். ஏனெனில் நாடார்களாகிய நாம் வீரபராக்கிரமும் சுருசுருப்பும் ஊக்கமும் விடாமுயற்சியும் பொருந்தியவர்களாக இருக்கிறோம்.

சென்னை மாகாணத்தில் நடைபெறும் கைத்தொழில்களுக்கு அரசாங்கத்தார் பல உதவிகள் செய்து ஆதரிக்கும்படியாக சென்னை சட்டசபையில் ஓர் மசோதா நிறைவேற்றப் பட்டிருப்பதும், நம் மாகாணவாசிகளின் அதிர்ஷ்டகாலமேயாகும். இதனால் நம் கைத் தொழில்களுக்கும் நன்மைகள் ஏற்படலாம். இதோடு நம்மில் கைத்தொழில் விசேஷமின்றி கஷ்டப்படும் குறையை நீக்கி கைத் தொழில் அபிவிருத்தியடையுமாறு நம்பால்பர்களுக்கு கைத் தொழிற் கல்வியை உபதேசிக்குமாறும் கடவுளானவர் வல்லமைபொருந்திய ஓர் வாத்தை இப்போது நமக்கு அருளியிருக்கிறார். அதுதான் சைனா, ஜப்பான், அமெரிக்கா, ஜாவா முதலிய இடங்களில் சென்று விசேஷக் கைத்தொழிற் கல்விகளைக்கற்று பிரபல இஞ்சினியராகவும் அநேக அன்னிய நாட்டினர் கைத்தொழிற்சாலைகளுக்கு தலைவராகவும் இருந்து விசேஷ அனுபோகத் தேர்ச்சிபெற்று வந்திருக்கிற டெக்னிக்கல் இஞ்சினீயர் கனம் ராஜா தேவவரம் அவர்கள் இதுவரை கொழும்பில் தமது சொந்த முயற்சியால் பல கைத்தொழில்களையும் செய்து கவர்ன்மெண்டாரும் மெச்சும் வண்ணம் விருத்தியடைந்திருக்கிறார்கள். இப்போது அவர்களுக்கு குலாபிமானம் மிகுதிக்க [illegible] நம் நாடார் தலைவர்களில் [illegible] பத்து பிள்ளைகளாவது இஞ்சினீயரிங் முறையில் அமெரிக்கா, ஐரோப்பாமுதலிய இடங்களில் போய் படிப்பதைக்காட்டிலும் [illegible] நிலைமையில் தேர்ச்சிபெறுமாறுசெய்தும் தென்னிந்தியாவில் பற்பல கைத்தொழிற்சாலைகளை ஸ்தாபித்து நடத்தவேண்டுமென்றும் முன்வந்திருக்கிறார்கள். நாம் அன்னிய நாடுகளுக்குப்போய் [illegible] கைத்தொழிற்கல்வி கற்கவேண்டுமென்றிருந்த ஒரு [illegible] நாடார்களால் தீர்ந்தியாகிவிட்டது. தேசங்கள் தோறும் கைத்தொழிலால் நாளுக்குநாள் செல்வாக்கைப் பெற்றுக் கொண்டிருப்பதையும், கவர்ன்மெண்டாரவர்களால் நம்கைத்தொழில்களுக்கு இப்போது பல உதவிகளும் ஆதரவும் கிடைப்பதாக இருப்பதையும், கைத்தொழிற் கல்வியை கற்கப் போகிறவர்கும் கைத்தொழிற்சாலை ஸ்தாபித்து [illegible] இல்லாத நடத்துவதற்கும் நமது டெக்னிகல் இஞ்சினீயர் ராஜா தேவவரம் நாடார் அவர்கள் முன்வந்திருப்பதையும் நன்கு தெரிந்தும், ஹே! நாடார் குலச்செல்வர்களே, கைத்தொழில் விஷயத்தில் இனி தூக்கம் கொள்ளுதல் கண்டிப்பாய்க்கூடாது. நமக்கு மிகவும் சாதகமானதும் விசேஷலாபமானதும் தரக்கூடியதுமான பல கைத் தொழில்களிருக்கின்றன. அதில் முக்கியமானது பருத்தியை பஞ்சாக்கவும், பஞ்சை நூலாகவும், நூலை துணியாகவும், துணியை வஸ்திரங்களாகவும், சட்டைகளாகவும் செய்தல். பனைநார் கருப்பு கட்டியாகவும், சர்க்கரையாகவும் செய்தல். நெருப்புக்குச்சி செய்தல். [illegible], நூல்களுக்கு சாயமிடுதல். பொம்மைகள் [illegible] உற்பத்தி செய்தல். செம்பு, பித்தளை, ஈயம், அலுமினியம் இவைகளால் பாத்திரங்களும் வெள்ளி தங்கம் இவைகளால் நகைகளும் செய்தல் இரும்பில் இயந்திரங்களும் கட்டடவேலைக்குறிய கருவிகளும் செய்தல். மரத்தால், பெஞ்சு, மேஜை, நாற்காலி, பீரோ முதலிய சாமான்கள் செய்தல். தகரம், காயிதம், ரப்பர், மரம் முதலியவைகளால் பொம்மைகளும் விளையாட்டுக்கருவிகளும், செய்தல். கொம்பு, எலும்பு இவைகளால் பித்தான்கள் செய்தல். இன்னும் வருமானமான கைத் தொழில்களை ஆரம்பித்துச் செய்யலாம். மூலதனம் ஜாஸ்தி தேவையான கைத்தொழிற் சாலைகளுக்குக் கூட்டுறவு கம்பேனிகள் ஸ்தாபித்து நடத்தலாம். கைத் தொழிலால் முதலாளிகளுக்கு விசேஷ வருமானமும் நம் ஏழை ஜனங்களுக்கு நல்ல கூலியும் கிடைத்து நம் ஜனசமூகமே விரைவில் உன்னத நிலைமையை அடைய அநுகூலமாகும். ஆகவே நம்மில் புத்தி கூர்மையும் சாமர்த்தியமும் விடாமுயற்சியும் பொருந்திய பல பாலியமானவர்களை நமது டெக்னிக்கல் இஞ்சினீர் ராஜா தேவவரம் அவர்களிடம் அனுப்பி பல கைத்தொழில்களையும் கற்றுவரும் படிக்கும் நம்மவர்களிருக்கும் முக்கிய ஊர்கள் தோறும் கைத்தொழிற்சாலைகளை ஸ்தாபித்து நடத்தி உலகத்தோர் மதிக்கும் வண்ணம் பெருப்புகழையும் ஐஸ்வரியத்தையும் விசேஷ செல்வாக்கையும் பெற்றுப்பிரகாசிக்கச் செய்யவேணுமாய்ப் பிரார்த்திக்கின்றோம்.

## தேவை.

லோயர் செக்கண்டேரி (Lower Secondary) பாஸ்பண்ணின உபாத்தியாயர், உபாத்தியாயினி இருவர் கல்லுப்பட்டி நாடார் வித்தியாசாலைக்குத் தேவை. குடும்பத்துடன் வந்து அமர்ந்தால் நல்லது. சாமர்த்தியத்துக்குத் தக்க சம்பளம் கொடுக்கப்படும். அப்ளிகேஷன் அனுப்பவும்.

விலாசம்—

M பொன்னப்ப நாடார், மானேஜர்
நாடார் வித்தியாசாலை
ம. கல்லுப்பட்டி,
(திருமங்கலம் Tk.)

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## பர்மா வர்த்தமானம்.

### நாடார் மகாஜன சங்க பர்மா கிளைச்சபை.

நாளது ஜனவரி ௴ 27உ சனிக்கிழமை இரவு 6½-மணிக்கு மேற்படி சங்க ஆதரவில் இவ்வூர்க்கமாகக் குவிஜயஞ்செய்திருக்கும் "நாடார்குல மித்திரன்" பத்திராதிபர் ஸ்ரீமான் S. A. முத்து நாடார் அவர்களுக்கும், 'மித்திரன்' கௌரவ மானேஜர் ஸ்ரீமான் T. கருப்பையாபிள்ளையவர்களுக்கும் நல்வரவு வந்தனோபசாரம் செய்வான் வேண்டி ஓர் பொதுக் கூட்டம் மேற்படி சங்கக்கட்டடத்தில் நடைபெற்றது. பிரபலதலைவர்களும், பால்ய நாடார் குலாபிமானிகளுமாக சுமார் 600 பேர் குழுமியிருந்தனர். விஜயம் செய்திருந்த முக்கியஸ்தர்கள்வருமாறு:—

ஸ்ரீமான்களான ராவ்சாகிப் டாக்டர் J. S. லாமேக் நாடாரவர்கள், S. ஞானவீரநாடாரவர்கள் (பாரிஸ்ட்டர்,) தர்மராஜ் நாடாரவர்கள் B. A. B. L; G. யோசேப்பு நாடாரவர்கள் M. A. B. L. A. ஜேசுவடியான் நாடாரவர்கள், எஸ். பொன்னுச்சாமி நாடாரவர்கள், வை. மு. முத்துக்குமார நாடாரவர்கள், போஸ்ட்மாஸ்டர், N. சாமுவேல் நாடாரவர்கள், தெ. மரியாயப்ப நாடாரவர்கள், பு. கு. அ. கணபதி நாடாரவர்கள், தசண்முக நாடாரவர்கள், K. P. ராமசுவாமி நாடாரவர்கள், சின்னகாளை நாடாரவர்கள், அ. சந்திவீர நாடாரவர்கள், P. S. P. முத்தையா நாடாரவர்கள், A. டேவிட் நாடாரவர்கள், எஸ். கோவிந்தபிள்ளை நாடாரவர்கள், இருளப்ப நாடாரவர்கள், ஜோதிடவித்வான் ஆ. அருணாசல நாடாரவர்கள், மு. பொன்னைய நாடாரவர்கள், மற்றும் பலரும் விஜயம் செய்திருந்தனர். சபை சுமார் 8-மணிக்கு ஆரம்பமானது. சங்க பிரஸிடென்ட் ராவ்சாகிப் டாக்டர் ஸ்ரீமான் J. S. லாமேக் நாடாரவர்கள் தலைமை வகித்தார்கள். கடவுள் வணக்கம் ஜோதிடர் ஸ்ரீமான் ஆ. அருணாசலநாடாரவர்கள் பாடினார்கள். பின்னர் சங்கக்காரியதரிசி ஸ்ரீமான் P. S. P. முத்தையா நாடாரவர்கள் கனம் பத்திராதிபரவர்களையும், கனம் கௌரவ மானேஜரவர்களையும் சபையாருக்கு அறிமுகம் செய்வித்து சங்கத்தின் பேரால் வாழ்த்துதல் கூறினார்கள்.

பின்னர் ஸ்ரீமான் த. வடிவேல் நாடாரவர்களால் சங்கத்தின் பேரால் வாழ்த்துதல் செய்யுள் ரூபமாக சபையோர் குதூகல மடையும் வண்ணம் கனம் அதிபரவர்களின் குலாபிமானத்தையும்; தளராபல முயற்சிகளையும் வியந்தும், கனம் கௌரவமானேஜரவர்களின் பொதுஜன ஊழியத்தையும் விசேஷமாக நம்மவர்களின் பேரில் கொண்டிருக்கும் அபிமானத்தையும் கொண்டாடி பாடப்பட்டது. சபையோர் பேரானந்தங் கொண்டு பெருங்கரகோஷஞ் செய்தனர்.

பின்பு நண்பர் S. J. தாஸ் அவர்கள் கனம் அதிபரவர்களின் ஜாதிய ஊழியத்தையும், கனம் கௌரவ மானேஜரவர்களின் பொதுஜன ஊழியத்தையும் தக்க தாது 5-வருஷ அனுபவத்தின் மூலமாய் எடுத்துரைத்து சங்க ஹோதாவில் வாழ்த்துதல் கூறினார்கள். (பெருங்கரகோஷம்.)

அடுத்தாற்போல் கனம் பத்திராதிபரவர்களால், "பத்திரிகையின் அவசியம்" என்னும் விஷயமாய் வெகு உக்கிரமாகவும், அபிமானத்தோடும், மனஎழுச்சியோடும் உதாரணத்தோடும், நமது பிரதமச்சங்கத்தின் நோக்கங்களைக் காட்டி அதன் பிரதான நோக்கமாகிய இவ்விஷயத்தினால் மனிதனடையும் உலகஞானத்தை விளக்கிக்காட்டி இதினால் நம்ஜன சமூகம் முன்னடையாதிருந்த தற்போது அடைந்துவருகிற இனி அடையப்போகிற ஆகிய திரிகாலத்தோற்றத்தைப்பற்றியும் தனது அனுபோகவாயிலாலும் சபையோர் கேட்டுள்ளம்களியும் வண்ணம் நெடுபுதிய புதிய பொருள் சுவையோடுகூடிய தாய்ப் பிரசங்கித்துப் பின் நம் மித்திரனை வாரப்பதிப்பாக்க இல்லை நாடார்களை மித்திரனுக்குத் தாயாகவும், பர்மா நாடார்களை தகப்பனுகவும் கருதும்படி அவர்கள் மனோநிலைமையை வெளிக்காட்டவேண்டும் என்று குறிப்பிட்டுப் பேசினார்கள்.

சபையோர் யாவரும் ஜாதிய உணர்ச்சி வெள்ளம் பெற்றவர்களாய் மனக்கிளர்ச்சியோடு தாங்கள் உங்கள் வேண்டுகோளுக்காக முயற்சிசெய்வோம் என்பதைக் காட்ட அறிகுறியாக பெருங்கரகோஷம் புரிந்தனர்.

## கடிதங்கள்.

### சிவகாசி பஞ்சாயத்து கோர்ட்டார் அவர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

இவ்வூரில் பஞ்சாயத்துக் கோர்ட்டு ஸ்தாபித்து சுமார் 1½ வருஷகால மிருக்கலாம். மேல்படி கோர்ட்டு ஸ்தாபித்தது முதல் பொது ஜனங்களுக்கு எவ்வளவோ நன்மையைக் கொடுத்திருந்ததும், சிற்சில சமயங்களில் பெருந் துக்கமான நிலைமைக்குப் பஞ்சாயத்தார்கள் கொண்டு வந்து விடுகிறார்கள். அதாவது வாதிக்கு பிரதிவாதி வாஸ்தவமாக செல்ல வேண்டியதிருக்கிறது என்று பஞ்சாயத்தார்களுக்கு நன்றாய்த் தெரிகிறது. அப்படித் தெரிந்திருந்தும் முடிவில் பஞ்சாயத்தார்கள் தீர்ப்பில் வாதிக்கு பிரதிவாதி செல்லவேண்டிய பாக்கியில் கொஞ்சம் தள்ளுபடி செய்து தீர்ப்பு செய்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள்.

தள்ளுபடி யானதொகைக்கு காரணமென்ன வென்று வாதிகேட்டால் பஞ்சாயத்தார்கள் பதில் சொல்ல காரணம் தெரியாமல் விழித்துக் கொண்டு எங்களிடத்தில் ஒன்றும் கேள்க்கக் கூடாது மேல் கோர்ட்டுக்குப் போய் அப்பீல் செய்து கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். என்னே இவர்களின் தீர்ப்பு! இதற்குத்தானா இவர்களை பஞ்சாயத்தார்களாக நியமித்தது. இவர்கள்தானா பொது ஜனங்களுக்கு நியாயம் தீர்ப்பவர்கள். இனியாவது இது விஷயத்தை கவனிப்பார்களாக.

கி. கு. ச. கிருஷ்ணசாமி நாடார்.

### விலகுதல்.

"பணம்" என்ற பத்திரிகையில் அதன் ஆரம்ப முதல் சென்ற டிசம்பர் மாதம் வரையில் நான் வகித்திருந்த "உதவி ஆசிரியர்" ஸ்தானத்தை அபிப்பிராயபேதங்கள் காரணமாக இந்த ஜனவரி மாதம் முதல் விட்டு விலகிக்கொண்டேன் மனப்பூர்வமாய் எவ்வளவோ பிரயாசையுடனும், ஆரம்பம் செய்து அன்புடனும் தூங்கு பகல் கண்விழித்தும் சென்ற ½-வருஷகாலமாக உழைத்த உழைப்பும், அதன் முடிவும், எதிர்பாராத நிலையில் முடிந்தது. இனி அப்பத்திரிகையில் வெளிவரும் விஷயங்களுக்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

ஏல. ஜி. இராமாநுஜலு நாயுடு
[illegible],

பிரசங்க வாக்குச் சாதுர்யப் பிரசங்கியெனப் பல்லோராலும் புகழப்பெற்ற ஸ்ரீமான் T. கருப்பையா பிள்ளையவர்கள் "சங்கநோக்கமும், நமது கடமையும்" என்ற விஷயமாக மிகவிரிவாகவும், நமது சங்கவளர்ச்சியின் அனுபவத்தையும், நமது மகாஜனங்களின் நவீன உணர்ச்சியையும், தங்களது நீண்டகால அனுபவத்தில் கண்ட உண்மைகளை உள்ளன்புடனும், மனஉற்சாகத்துடனும் பேசினார்கள். கனம் பிள்ளை அவர்கள் குறிப்பிட்ட முக்கிய விஷயமாவது:— தூத்துக்குடியில் நடைபெறும் நாடார் பாடசாலைக்கு எல்லாரும் பங்காளிகளாகவேண்டும் என்பதும், நாடார் மகாஜனசங்கத்திற்கு மெம்பர்களாகச் சேர்ந்து ஆதரிக்கவேண்டும் என்றும், நீங்கள் இக்காரியம் செய்யாது போனால் சமூகமானது, தளர்ச்சியடைந்து வீழ்ச்சி பெற்றுவிடும் என்று உருக்கமாகப் பேசினார்கள்.

அடுத்தாற்போல் ஸ்ரீமான் தர்மராஜ் நாடார் B. A. B. L: அவர்கள் கனம் பத்திராதிபரவர்களுக்கும், கனம் கௌரவ மானேஜரவர்களுக்கும் வந்தனோபசாரம் செய்து நமது குல முற்போக்குக்கு செய்யவேண்டிய கடமைகளையும், நாம ஒன்றுபட்ட ஒரே நோக்கமாக உழைக்கவேண்டுமென்றும் நாம் செய்யும் முயற்சிகளை தளர்ச்சி யடையவிடாது உறுதியாக முன்னின்று உழைக்கவேண்டும் என்றும் உருக்கமாகவும், அபிமானமேலிட்டு ஆத்திரத்துடனும் பேசினார்கள்.

பின்னர் மேற்படி சங்கத்திற்கு நாளதுவருஷத்து நிர்வாக உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப் பட்டனர்.

முடிவுரையாக சங்கம் காரியதரிசியவர்களால் விஜயம் செய்திருந்த கனவான்களுக்கும் வந்தனோபசாரம் செய்யப்பட்டு ராஜவாழ்த்துடன் சபைகலைந்தது என்று ஸ்ரீமான் ச. மு. சுப்பையா நாடார் எழுதுகிறார்.

## செய்தித் திரட்டு.

### விருதுபட்டி, இந்து நாடார் க்ஷத்திரிய பெண்பாடசாலை அரை வருஷ பரிசளிப்புக்கொண்டாட்டம்.

இக்கலாசாலையின் அரை வருஷ பரிசளிப்பு வைபவம் நாளது தை ௴ 18உ (31-1-23) புதன்கிழமை மாலை 3-30-மணி முதல் 6-மணி வரையும் பாடசாலையின் ஹாலில், அருப்புக்கோட்டையிலுள்ள விருதுபட்டி க்ஷத்திரிய வித்யாசாலை ரிசர்வ் பண்டின் டிரஸ்டியும், பிரபல வர்த்தகருமாகிய மகா-௱-௱-ஸ்ரீ தே. அ. ச. அப்பம்பெருமாள் நாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது.

* * *

### "மீட்டிங்",

நாளது ௴ 19உ திங்கள்கிழமை மாலை 10-மணிக்கு நாகபட்டணம் ஸ்ரீநீலாயதாக்ஷி அம்மன் கோவில்தெற்குவீதியில் "ஆக்டகன்" ஆஸ்பத்திரி கட்டடத்திலிருக்கும் நாடார் வர்த்தகக் கம்பெனி லிமிடெட் ஆபீஸில் அடியில்கண்ட விஷயங்களை ஆலோசித்து முடிவு செய்ய மேற்படி கம்பெனியின் பங்குதாரர்களுடைய (share holder) கூட்டம் (statutory General meeting) நடை பெறுமென நமது நிருபர் எழுதுகிறார்.

ஆலோசிக்கவேண்டிய விஷயங்கள்

1. டைரக்டர்களால் தயார் செய்துள்ள ஸ்டாட்டுடெரி ரிப்போர்ட்டை கவனித்து அங்கீகரித்தல்.

2. வியாபாரங்களை நடத்தவேண்டிய விஷயங்களைப் பற்றி தீர்மானித்தல்.

3. கம்பெனி சட்டத்தை அனுசரித்து உப சட்டங்கள் (By Laws) ஏற்படுத்தல்.

* * *

### தூத்துக்குடி.

இவ்வூரில் புதிதாக மேலூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு பக்கத்தில் அமைத்திருக்கும் நவீன சுகபோஜனசாலையில் 1-2-23 காலை 9-மணிக்கு, 15 ஐரோப்பிய போர் வீரர்களுக்குத் தலைமையாயிருந்த க்ஷத்திரிய அபசகுலத் தணைல் மிஸ்டர் வி. எ. அஸரியா நாடார் அவர்களை வரவேற்று 3-2-23 ல் ஒருசபை கூடியதில் கனம் டாக்டர்ஜாம்ராஜ்நாடாரவர்கள் நம்குல விஷயத்தையும் மிஸ்டர் அஸரியா நாடார் அவர்கள் சென்னைப் பட்டணத்தில் 1-4-23 முதல் வருமானவரி கலெக்டர் உத்தியோகம் வகிக்க ஆர்டர் வந்திருப்பதற்கும் கடவுள் அவர்களை இன்னும் மேலான பதவிக்குக்கொண்டு வரவேணுமென்பதாயும் உபந்நியாசம் செய்த பின், மேற்படி போஜனசாலை அதிபர்களாகிய ஸ்ரீமான்கள் கி. ச. கருப்பையா நாடார் ச. முருகசாமி நாடார் இவர்களால் புஷ்பமாலை சூட்டப்பெற்று தாம்பூலம் வழங்கியபின், மிஸ்டர் அஸரியா நாடார் அவர்கள் இப்போஜனசாலையின் பதார்த்தவகைகளைப் பற்றியும் அவர்கள் நடத்தும் திறமைகளையும் புகழ்ந்துபேசி நற்சாக்ஷிபத்திரம் கொடுத்து மாலை 5-மணிக்கு கொழும்புக்கு பிரயாணமானார்கள். அவர்களை கடவுள் பூரண ஆயுளுடனும் உத்தியோக வெற்றியுடனும் இருக்க ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கிறோம் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

* * *

### ஆரியபாலகானசபா.

சென்னை ச. சு. சங்கரலிங்கநாடார் அவர்களின் ஆரியபாலகான சபையார் 27-1-23 முதல் திண்டுக்கல் பழனிரஸ்தா சரஸ்வதி விலாசத் தகரக்கொட்டகையில் நாடகம் நடத்துகின்றனர், பிரதி திங்கள் வியாழன் சனி வாரங்களில் தவறாமல் நாடகம் நடைபெறும்.

* * *

### கயத்தாரில் கள்ளர்கள் பயம்.

கயத்தாரிலிருந்து கிழக்கு கோக்கிக கடம்பூர்க்குப் போகும் ரோட்டில் கள்ளர்களின் துஷ்ட செயல்கள் அடிக்கடி நிகழ்ந்து கொண்டிருக்கிறது. கயத்தாரில் பிரபலமான சந்தை வியாழக்கிழமை தோறும் கூடுவதுண்டு. நாளது தை ௴ 12உ யன்று மேற்படி சந்தைக்கு போய் வந்து கொண்டிருந்த இரண்டு பேரிடம் சில கள்ளர்கள் வழிமறித்து அடித்துக் கஷ்டப்படுத்தி சில நகைகளையும் மற்றும் சாமான்களையும் பறித்துக் கொண்டார்கள். அன்று இரவு 8-மணிக் கெல்லாம் கடம்பூருக்கு வந்துகொண்டிருந்த ஒரு வண்டிக்காரரையும் கயத்தாருக்குக் கிழக்கே நாலாவது மைலில் மேற்படி கள்ளர்கள்

## பொதுச்சமாச்சாரம்.

### 161 வயதுள்ள ஒருமாது.

டவிபிஸுலைச் சேர்ந்த கிங்காரைக்கயென்னும் கிராமத்தில் டௌசம்பு என்னும் ஒரு ஸ்திரீ மாது 161 வருஷகாலம் உயிருடனிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. பண்டையகால ஸ்திரீ இனத்தவளைச் சேர்ந்தவ ளாகையால் அவள் பிறந்த வருஷம் சரியாய் தெரியாவிடினும் 1123-வது புத்தவருடம் அல்லது 1761-வது கிறிஸ்தவ வருஷத்தில் பிறந்ததாக தெரியவருகிறது. கவுங்டாஜியின் மகனை மாங்மாங்கைகொன்றபின்னர் ரான் புதிதாககட்டிய அமரபுரியில் போடாபை சிம்மாசனமேறிய காலத்தில்தான் உயிருடனிருந்ததாகவும் அப்பொழுது அவர்களுக்கு வயது முப்பதாகி இரண்டு குழந்தைகளுமிருந்ததாம். தனது கணவன் இறந்துபோன பிறகு மறுகணவனுக்கு 2 பெண்குழந்தைகள் பிறந்ததாம். அவரின்சந்ததி தற்சமயம் 105பேர் ஆகிறது. 4 மகள், 14 பேரன் பேத்திமார், 69 பேரன் பேத்திமக்கள்மார், 18 பேரன் பேத்தியின் பேரன் பேத்திமார். அவரின் மூத்தமகளான மாக்கோ வென்பவளுக்கு தற்காலம் வயது 120 ஆக தனது தாயை விட அதிக வயது முதிர்ச்சி யடைந்தவளைப்போல் காணப்படுகிறளாம்.

### கொழுத்திருக்கிறவர்களுக்கு வரி.

இப்பொழுது ஒவ்வொரு ராஜ்யத்திலும் பணமில்லாமையால் ஜனங்களின் மேல் விதவிதமான வரிகளைப் போடுவதாக நாம் கேட்டிருக்கிறோம். பார்வையுமிட்டிருக்கிறோம். இதற்காக பல பேர்கள் பலவிதமான பணம் சம்பாதிக்கும் வழியையும் ஜனங்களுக்கு கஷ்டத்தை குறைப்பதற்கும், வழிகளை கவர்ன்மெண்டாருக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் அவைகளை யெல்லாம் அவர்கள் தள்ளிவிட்டார்கள்.

ஓர் மெடிகல் பேப்பர் கீழ்வருபவைகளைப்பற்றி கவர்ன்மெண்டாருக்கு தெரிவிக்கிறது. அதாவது சில ஜனங்கள் கொழுத்துப்போயிருக்கிறார்கள். சாதாரணமாக ஒருவன் உடம்பில் 135 பவுண்டு lb மாமிச மிருக்கவேண்டியது. சிலரிடத்தில் இதற்கும் அதிகமாக மாமிசமிருந்தால் கீழ்வரும் கணக்கு பிரகாரம் வரிபோட்டால் நல்லதென்று தெரிவிக்கிறது. அதாவது 200 lb வரைக்கும் 12 ஷி6பென்ஸ்ஒரு வருடத்திற்கும்; 200பவுண்டிலிருந்து 270பவுண்டுவரைக்கும் 25 ஷிலிங்கென்றும்; 270 பவுண்டுக்குமேல் ஒவ்வொரு பவுண்டுக்கு 7 ஷிலிங் 6 பென்ஸ் வீதமாக வரிகொடுக்க வேண்டுமாம்.

இது ஓர் நல்லவழிதான். ஆனால் அம்மாதிரியான ஜனங்கள் அகப்படுவது கஷ்டம் பல இடுக்கண்கள் உண்டு. ஏனென்றால், ஒவ்வொருவரையும் எடைபோடவேண்டும். அதற்குபிறகு அவர்களை எடையின் பிரகாரம் வரிபோடவேண்டும். இதற்கு எவ்வளவோ பணம் செலவாகும் எனக்கு தோன்றின மட்டிலும் ஒருவிதத்தில் நல்லவழி யென்று சொல்லுவேன். வி. தொ.

வழிமறித்துப் பெரிய கலகஞ்செய்தனர் கலகஞ்செய்தும் பிரயோஜனமில்லை. வண்டியிலிருந்த ஒருவாலிபன் கையிலணிந்திருந்த காப்பும் சிற்சில சாமான்களுமாக 200ரூபாய் பெருமான சொத்துக்களே அந்தக்கள்ளர்கள் வசம் கிடைத்தது. வண்டியிலிருந்தவர்கள் எட்டுப் பேர்களுக்கும்பலத்தகாயம். கள்ளர்கள் பதினைந்து பேர்களெனத் தெரியவருகிறது, அந்தோ! கயத்தாரில் போலீஸ் டேஷன் இருந்தும் அங்கேதான் அடிக்கடி குழப்பம் ஏற்படுகிறது. போலீஸ் இன்ஸ்பெக்டர், போலீஸ்காரர்கள் வெகு தீவரத்துடன் கள்ளர்களைப் பிடிக்கும் முயற்சியிலிருக்கின்றனர் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

* * *

### பர்மார்த்தலிங்கபுரம்.

இந்த வருஷத்தில் நம்நாடார் சமுதாயத்திலிருந்து திருவிதாங்கூர் சமஸ்தானத்து ஸ்ரீ மூலம் பிரஜா சபைக்கு கவர்ன்மெண்டு பெம்பராய் பர்மார்த்தலிங்கபுரம் கெ. சிவசுப்ரமண்ய நாடார் அவர்களை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்றஒரு நிருபர் எழுதுகிறார்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

நாடார்குலமித்திரன்

துந்துபிஞு தைமீ 29உ

## அந்தம், இந்தம், எங்கும் உள்ள மானோபாவங்கள்.

கென்யா இந்தியர்களின் நிலைமை பரிதாபகரமாயிருக்கின்றதாம். கென்யாவில்முதலாவது குடியேறியவர்கள் இந்தியர்கள். அவர்கள் சிரப்பிரயாசையோடு காடுகளை பண்படுத்தி நாடுகளை உண்டு பண்ணினர்கள். பல வருஷங்கள் சென்ற பின்னர் ஐரோப்பியர்குடியேறினர்கள். இது நமது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் ஏகாதிபத்யத்துள்ளடங்கிய ஒரு குடியேற்ற நாடாகவுமிருந்து,இப்போது ஸர் ராபர்ட் கிராய்டன் கவர்னராகவுமிருந்து வருகிறார். அங்குள்ள இந்தியர்கள் ஐரோப்பியர்களுக் கொத்த சமவுரிமை தங்களுக்கிருக்க வேண்டுமென்று வெகு நாளாக விரும்பினர்கள். அவர்களவ்வாறு விரும்புவதே நியாயம். ஐரோப்பியர்களோ அதற்கெதிரிடையாக விருந்து வருகிறார்கள்; அதுவுஞ் சகஜம். இப்போராட்டத்தினடுவில் இந்தியரின் உரிமைகளை நிர்ணயஞ் செய்யும் விஷயமாக பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு மந்திரியிடமிருந்து கென்யா கவர்னருக்கு உத்திரவு கிடைத்துவிட்டதென்றும் இந்தியரின் கோரிக்கைகளின் பெரும்பான்மை ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டன வென்றும் அவ்விஷயம் தெரிய வந்ததும் கென்யாவிலுள்ள ஐரோப்பியர்களுக் கெல்லாம் திடுக்கிட்டு நடுக்கமுண்டாகி இந்தியருக்குச் சமமான உரிமை கொடுக்கப்படின் தாங்கள் இந்தியரைக் கொலை செய்து விடப் போவதாக பல வெள்ளைக்காரர்கள் பயமுறுத்துகின்றார்களாம். புருஷன் வலுவிழ்ந்து பெண்டீர்த் தெருச் சண்டைகளை வலுவிலிழுப்பது போல் அவர்கள் ஏகாதிபத்தியத்தின் சலுகையை அதிகமாய்ப்பெற்றிருப்பதிலிருந்துஇரக்கமற்றசெய்கையைவெளிக்காட்டுவோ மென்று அச்சமின்றி ஆர்ப்பாட்டஞ் செய்கிறார்கள். இவ்வனியாயத்தைப் பொருக்க முடியாமல் இந்தியப் பத்திரிகைகள் அக்கெனியாவில் இந்தியருக்கு எவ்வளவு பாத்தியமிருக்கின்றதோ அதில் பத்திலொரு பங்குகூட அங்குள்ள ஐரோப்பியர்களுக் கிருக்கவேண்டியதில்லையென்று எடுத்துக்காட்டுகின்றது.

இச்சம்பவத்தால் என்ன நேரிடுமென்பதை இந்தியர்களனைவரும் எதிர்பார்த்திருக்கலாம்.

இந்தியாவிலோ சிறைக் கூடத்தில் மகாத்மா காந்தி மௌனயோகஞ் சாதிக்கிறா ரென்பதை யறியாமல், மனவேதனையிலிருக்கிறா ரென்ற வதந்தி யுலாவி விட்டது. காங்கரஸில் பிளவுண்டாகி விட்டது. ஒவ்வொரு வருஷத்திலும் ஒவ்வொரு புதுக் கட்சிக ளேற்பட்டு ஒற்றுமைக் குறைவுகள் அதிகப்பட்டுக் கொண்டே வருகின்றது. இந்தியப் பொதுப் பத்திரிகைகளெல்லாம் ஒவ்வொரு கக்ஷியின் சார்பில் பலவாகப்பிரிந்து அவரவர் கக்ஷியைப் பலப்படுத்த வேண்டி எழுத்துச் சண்டையைத் தொடங்கியிருக்கிறது. பிரசங்கிகளும் பிரசாரகர்களும் வாய்ச்சண்டையில் இறங்கி விட்டார்கள். இவைகளை பரிசுத்த வேண்டி காத்திருக்கும் மேதாவிகளின் பிரயத்தனங்களையும் அவர்கள் முயற்சியையும் எதிர்பார்த்திருக்கிறோம்.

சென்னை மகாணத்திலோ ஹிந்து தேவஸ்தான பரிபாலன மசோதாவென்று புதிதாய்த் தலைகாட்டியிருக்கிறது. தேவர்க் கஞ்சாத கோயில்ப் பூஜகர்களின் கூடு பொசுங்கிப்போகுமோ வென்றச்ச முண்டாகி எங்கும் பெருங்கூப்பாடாயிருக்கிறது. பரம்பரைப் பாத்தியங்கள் பறிபட்டுப்போகுமோ வென்ற அச்சமேலிட்டிருக்கிறது. இந்தியாக் கோயில்களில் அநேகம் முற்கால அரசர்களால் கட்டப் பெற்று அரசர்களால் மானியங்கள் விடப்பெற்று அவர்களால் பரிபாலிக்கப் பெற்று வந்திருக்கின்றன. தற்காலம் கோயில்களுக்கு ராஜாக்களாலும், பிரபுக்களாலும் மானியங்களும் நன்கொடைகளும் கோடிக்கணக்காககொடுக்கப்பட்டு வருவதோடு இந்துமதப்பற்றுள்ள எழிய ஜனங்களுங்கூட கடவுள் பக்திமீது தங்கள் வருமானங்களையும் பொருட்படுத்தாது காணிக்கைகளை அள்ளியிறைத்துக் கொண்டும் வருகிறார்கள். இந்து மதஸ்தாபன மடங்களும் அப்படியே தான் ஏற்பட்டு வந்திருக்கின்றன. இப்படிக் கிடைக்கப்பெற்ற வருமானங்களை ஓரங்கமாணியாக ஒருவகுப்பினர் சுயேட்சையாக அநுபவித்துக் கொண்டிருப்பதற்கு ஹானிவந்து விட்டதேயென்றும் ஆலய விஷயங்களில் அவர்கள் வைத்திருக்குங் கட்டுப்பாடுந் தட்டுக் கெட்டுப் போகுமோ வென்றும் பலருக்கும் பயமிருப்பதாகத் தெரிகிறது. ஆத்திரக்காரனுக்குப் புத்தி கட்டை யென்பதற்கொப்ப இப்பயத்தினால் இந்திய உண்மைத் தேசாபிமானிகள் தொழிலாளர் மீதும் தாழ்ந்த வகுப்பினர் மீதும் காட்டிவரும் அன்பைக்கூடக் கண்டித்து ஒருவர் பேசியிருக்கிறார். இக்கொடுமையாளரின் கூற்று கென்யா இந்தியரைக் கொடுமைப் படுத்தும் ஐரோப்பியர் கூற்றையே ஒக்கும். கென்யா இந்தியர் நிலைமைக்கு வருத்தப்பட்டெழுதும் நமது சுதேசப் பத்திரிகைகளும் கோயிலின்பால் கூறும் துவேஷ வார்த்தைகளைக் கண்டனம் பண்ணுதிருந்து வருவது மிகவும் விசனிக்கத்தக்கதே.

தேவஸ்தான பரிபாலன மசோதா தனிக்கமிட்டியில் ஸ்ரீமான் எம். வி. மதுரைப்பிள்ளை ஸ்ரீமான் பெரியநாயகம் ஆகிய இவர்களும் ஸ்தானம் வகிக்க என்ன நியாயம் என்று ஒருவர் சென்னையில் பேசியிருக்கிறார். அதற்கு ஸ்ரீமான் எம். வி. மதுரைப்பிள்ளையவர்கள் பதில் சரியானபடி கொடுத்திருப்பதையும் மற்றோர் பக்கத்தில் பிரசுரித்திருக்கின்றோம்.

திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள ஓர் ஊரில் அக்கினிக் காவடியின் சம்பந்தமாய் சில அறிவிலிகள் ஆற்றொணாத்துயரத்தை ஒரு வகுப்பினர் அடையும்படி செய்திருக்கின்றனர். இக்கொடுமையான சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருமிந்நாளில் சகல வகுப்பினரும் காங்கரஸ்க் கொள்கையை சமாதானத்துடன் எப்படி ஏற்றுக் கொள்ளமுடியும்?

ஐரோப்பாவிலோ 4-5 வருஷங்களாக தொடர்ச்சியாகப்போரே யன்றி வேறு காரியம்பார்க்க நேரமில்லாமலிருந்து விட்டு இப்போது சமாதான நிலைமை சரிவர நிறைவேறாமல் தத்தளிக்கின்றது. வேலையகப்படாமற் பல தொழிலாளர்கள் மிகுந்த கஷ்டப்படுவதாகவுந் தெரிகிறது. ஜெர்மனியர்கள் மீது முன்னம் பிரிட்டிஷ்க்கிருந்த கோபம் கொஞ்சம் தணிந்துஇரக்கங்காட்டுகின்றது. பிரான்சோ 1871ஞுல் தம்தலை (பாரிஸ்நகரம்) மீதிருந்து கொண்டு 300 கோடி ரூபாய் நஷ்டஈடும் பெற்று அல்சேஸ்லோரென் மாகாணமிரண்டையும் பிடுங்கிக் கொண்டதை மனதில் வைத்துக் கொண்டு ஜெர்மனிக்குச் சொந்தமான ரூர்ப்பிரதேசங்களை வசப்படுத்திக் கொண்டிருக்கின்றன. பெல்ஜியமும், இட்டாலியும் பிரான்சை பின்பற்றிக் கொண்டன. ஜெர்மனியார்கள் பலமில்லாதவர்கள் போல் சாத்விக எதிர்ப்பைக் காட்டி வருகிறார்களென்றாலும் அவர்களுடைய பேச்சிசு உக்ரம் தணிவாய்த் தெரியவில்லை. இதனால் மறுபடியும் ஒரு யுத்த முண்டாகுமோ வென்று பலராஜ்யங்களும் நடுங்குகின்றன. ஒருக்கால் யுத்தம்நேரிடுமானால் பிரான்சு தேசத்தை தனியே விட்டு பிரிட்டிஷ் ஒதுங்கி நிற்கமுடியுமா? பிரான்சு மெலிந்து போகநாம் சகிக்கமாட்டோமென்று முன் சொன்ன பிரிட்டிஷ் இப்போதும் பிரான்சு மெலிந்து போகச் சகித்து தனித்து விட்டிராதென்றே நம்புகின்றோம்.

இப்படி இங்கும் அங்கும் எங்கும் உள்ள ஜனங்களின் இயற்கைக்கு மாறாகவும் முன்னுச்குப்பின் முரணாகவும் மனோபாவங்கள் மாறிக் கொண்டு வருவதினாலே உலகத்திலே சமாதானம் ஒரு நிலைமையில் நிலைத்திருக்க வகையின்றிக் கலகமும் கொலையும் கொள்ளையும் அக்ரமமும் அதிகரித்து ஏழைத் தொழிலாளிகளும் விவசாயிகளும் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகவும் நேரிடுகின்றன. பாரபட்சமின்றி உலகராஜ்ய பாரத்தை நடத்துஞ் சர்வஜீவதயாபரன் நியத்தையியாலேநாட்ட தம்முடைய ஆக்ஞா சக்கரத்தைத்திருப்பி அருள்புரிவாராக.

## குறிப்புகள்.

### நாடார் பாங்கு லிமிட்டெட்.

1922ஞுடிசம்பர்மீ 31தேதியோடுமுடிவுள்ளவரவுசெலவுகணக்கு பிரதிமதுபார்வைக்கு வரப்பெற்றோம். நமது பாங்கின் பிரஸ்தாப வரவு செலவு கணக்குப்படி சகல செலவுகளும் போக சுத்தமாக ரூ 6984—9—4 லாபம் கிடைத்திருக்கிறது. அச்சுக்கூலி வகையறாச் செல்வு மட்டும் 860—13—6 ஆகிறது. ஆனால் அச்சவகையறாவில் இவ்வருடம் அதிகம் செலவழிக்கப் பட்டிருக்கிறதாயினும் இனி பின்திய வருடங்களில் அச்சுவகையறாவுக்கு அதிக செலவு ஏற்படாதென்று தெரிகிறது. ஏனென்றால், செக்புஸ்தகம் கணக்குபுஸ்தகம் மற்றப்புஸ்தகங்களும், தற்சமயம் உபயோகத்திற்கு போக மீந்து பின்திய வருட உபயோகங்களுக்கும் பிரயோசனப்படும்படி கைஇருப்பு இருப்பதாகத் தெரிகிறது. நமது பாங்கின் பிரஸ்தாப வருட வரவு செலவு கணக்கை கவனித்தவரையில் அதிகமாய் விசேஷ லாபங்கிடைக்கா விட்டாலும், முதல்வருடத்திலேயே லாப இனத்தில் நிற்பது பாராட்டத்தக்கது. இதிலிருந்து பாங்கின் பேரில் நமது மகாஜனங்களுக்கு நல்லபிப்பிராயமுண்டாவதுடன், அது நல்ல அபிவிருத்தியாகி, நல்ல வர்பத்தைதரும் என்ற அறிகுறிகள் காணப்படுகிறது. பிரஸ்தாப வருடவரவு செலவுக்கணக்கைக் கவனித்தமட்டிலும், பாங்கின் நிர்வாகிகள், அதிக திறமையுடன் பாங்கை பரிபாலித்திருக்கிறார்கள் என்பது நன்கு விளங்குகிறது. மேலும், பாங்குநிர்வாகிகள் பாங்கைநடாத்திய மாதிரியில், ஆடிட்டர் ரிப்போர்ட்டில் பாங்கைப் பற்றி ஆடிட்டர் W. J. சிரோமணி F. C. W. A. (கவர்ன்மெண்டு டிப்ளோமா பெற்றஅக்கவுண்டெண்டு) அவர்கள் குறிப்பிடுவதாவது:—

நாடார் பாங்கு லிமிட்டெட் 1922ஞு டிசம்பர்மீ 31உ யிலிருந்தபடி வரவு செலவு கணக்கை பரிசோதித்தேன். எனக்கு வேண்டியிருந்த சமாசாரங்களும், சமாதானங்களும் இவையெல்லாம் கிடைத்தன. என்னபிப்பிராயமென்னவென்றால் அட்பேற்பட்ட வரவு செலவு கணக்கானது சட்டத்தை அநுசரித்து எழுதப்பட்டிருப்பது மல்லாமல் எனக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறபடியும், எனக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிற சமாதானங்களின்படியும், பாங்கியின் புஸ்தகங்களினால் தெரியவந்தபடியும் அதன் காரியங்களின் ஸ்திதியை உண்மையாகவும், சரியாகவும் காட்டுகிறது.

மேல்கண்ட குறிப்பை வாசித்ததிலிருந்து பாங்குநல்ல வேலைசெய்திருக்கிறதென்றும் இன்னும் நல்ல பிரயோசனமளிக்குமென்று அறியக்கிடக்கிறது. ஆகையால் நாடார்குலத்தவர்கள் ஒவ்வொருவரும் நமது பாங்குக்கு தங்களாலியன்றளவு பங்குகள் எடுத்து அபிமானத்துடன் ஆதரிக்கும்படி வற்புறுத்தி வேண்டுகிறோம்.

### நமது கௌரவ மானேஜர்.

மித்திரன் கௌரவ மானேஜர் ஸ்ரீமான் T. கருப்பையாபிள்ளையவர்கள் தற்சமயம் இரங்கூன் மொஹல் வீதியில் 55B. நீர் கட்டடத்தில் (55. B. Mogul street Rangoon) இருக்கிறார்கள். ஆகையால், கனம் பிள்ளை அவர்களுக்கு கடிதமெழுதும் நேயர்கள் நேராக அவ்விலாசத்திற்கு எழுதிக் கொண்டாலும் சரி அல்லது நமது ஆபீஸுக்கு அனுப்பினாலும் உடனுக்குடன் கனம் பிள்ளையவர்களுக்கு கடிதங்கள் கிடைக்கும்படி தக்க ஏற்பாடுகளும் செய்து வைக்கப்பட்டிருக்கிறது.

### சட்டசபை தேறுதல்.

நமது சென்னை மாகாண சட்டசபை இரண்டாவது தேறுதலுக்கு இன்னும் ஏறக்குறைய ஒரு வருடந்தான் இருப்பதாகத் தெரிகிறது. இதைப்பற்றி நமது மித்திரனிலும் பல தடவைகளில் பிரஸ்தாபித்திருக்கிறோம். இது பற்றியவிஷயத்தில் இன்னும் நமது மகாஜன சங்கத்தார் யாதொரு முயற்சியு மில்லாதிருப்பதுபோல் தெரிகிறது. சென்ற எலெக்ஷனில் நாம் ஏமாற்றமடைய நேர்ந்தது போலல்லாமல் இத்தடவையும்வெகுஜாக்கிரதையுட னிருக்கவேண்டும். ஆகையால், நம்குல ஒட்டர்களை நாம் தக்கபடி தயார்செய்யவேண்டிய பொருப்பு அதிகமிருக்கிறது என்பதைமகாஜனசங்கத்தார் அறிந்துதக்க முயற்சி எடுப்பார்களென்றே நம்புகின்றோம்.

### கவுன்ஸில் மீட்டிங்கு மதுரை.

நமது நாடார் மகாஜன சங்கத்தின் கவுன்ஸில் மீட்டிங் நாளது 18-2-23யில் கூடப்போவதாக அறிகிறோம். முந்திய மீட்டிங்குகளில் தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்களும், ஏற்படுத்தப்பட்ட கமிட்டிகளும்எந்த அளவில் அமுலுக்குவந்திருக்கின்றன வென்பதைகவனிக்கவேண்டியது முறையாகும். ஆனால் நமது சங்க கவுன்ஸில் அத்தகைய முறையிலிறங்காமல், முந்திய மீட்டிங்கின் நடபடிக்கைகளை கவனியாமல் பின்னும்அதிகமாக பெயருக்கு தீர்மானங்களை நிறைவேற்றி வைப்பதினால் யாதுபயன் ஏற்படுமென்பதுநமக்குவிளங்கவில்லை. நிறைவேற்றப்பட்டவிஷயங்களை காரியதரிசி முதலிய பொருப்பேற்ற முக்கிய சங்க உத்தியோகஸ்தர்கள் எவ்வளவு தூரம் விஷயங்களை காரியத்தில் காட்டியிருக்கிறார்கள் என்று கவனிக்கவேண்டிய ஒரு ஒழுங்கான முறையை இன்னும் நமது கவுன்ஸிலர்கள் கைக்கொள்ளாமலிருப்பது மிகவும் விசனிக்கத்தக்கது.

அபிமானத்துடனும் கௌரவமாகவும், இன ஜனோபகாரமாய் ஓர் ஸ்தானத்தை வகித்தாலும் அது பொருப்பேற்றதாயில்லாமலிருக்குமானல், அதைக் கவனியாமலும் கண்டிக்காமலும்யிருக்கமுடியாது. காலச்சக்கர வேகத்தின் தன்மையையும் உலகத்தின்போக்கையும் தேசம் தற்சமயமிருக்குமீ நிலையும்கவனிப்போமாகில்நாம்செய்யவேண்டியவேலை அதிகமாயிருக்கிறதென்ற உண்மை வெளியாகும். பெயருக்காகவும் ஆடம்பரத்திற்காகவும் இனி எக்காரியத்தையும் செய்து கொண்டிருக்க நேரமில்லை என்பதையும் நமது மகாஜன சங்க கவுன்ஸிலர்கள் நன்கு உணரவேண்டும்.

சென்ற கவுன்ஸில் மீட்டிங்கில் நியமிக்கப்பட்ட கமிட்டிகள் இதுவரையும், யாதொருவேலையும் செய்ததாகத் தெரியவில்லை. இப்படியே மாறிமாறி குறைகளை எடுத்துக் காட்டிக்கொண்டே தீர்மானங்களையும் கமிட்டிகளையும் ஏற்படுத்திக் கொண்டுபோனால் அவைகள் அமுலுக்கு வருவது எப்போது என்பது நமக்கு வி

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# மதிப்புரை.

வேதம் இது ஒரு மாதாந்தர சஞ்சிகை. இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்குவேதங்களே நமது புராதனவேதங்கள் இவ்வேதங்கள் எல்லாம் சம்ஸ்கிருத பாஷையிலேயே இருந்து வந்திருக்கின்றன. மேலும், இடைக்காலத்தில் வேதங்களைச்சகலரும் பார்த்து மேன்பாடடையா வண்ணம் ஒரு பகுதியார் கட்டுப்பாடான சட்டங்களை கற்பித்துவிட்டார்கள் ஆகையால் நமது ஜனங்கள் வேத சாரங்களை உணர்ந்து மேன்பாடடைய வழியின்றி நப்பாராதனாடு பரிதாபநிலைக்குள்ளானது. இப்போது நமது தமிழ்மக்கள் பாலன்பு கூர்ந்து குன்னூர் ஆனர்தாச் சொமந்திலிருந்தும் ஸ்ரீமத் சிவத்தியாஞானந்த மகரிஷிகள் முதல் வேதமாகிய இருக்கு வேதத்தை இனிய செந்தமிழில் பாட்டும் உரையுமாக மொழி பெயர்த்து மாதந்தோறும் சஞ்சிகையாக வெளியிட்டுவருகிறார்கள். செய்தற்கரிய இப்பெருங் காரியங்களைச்செய்ய முன்வந்த நமது மகரிஷியவர்கள் தமிழுலகம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளன தமிழ் மக்கள் அனைவரும் இவ்வேத சஞ்சிகையை வாங்கிவாசிப்பார்களென்று நம்புகின்றோம். இதன் வருடச்சந்தா ரூ 6—0—0 வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். விலாசம்:—

'சுதேசபரிபாலினி' ஆபீஸ்
31-32. பார் வீதி, இரங்கூன்.

ஜாதிபேதமற்றோன் என்னும் தமிழ் மாதாந்தரப் பத்திரிகையின் 1-வது தொகுதி 7-வது பகுதி பிரதியொன்று கிடைக்கப்பெற்றோம். இந்த உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் பதிப்பிக்கப்படுகிறது. இதில் பலபொது விஷயங்களும் வாசிப்பதற்கருமையான வியாசங்கள் அடங்கியிருக்கிறதாயினும் நிறஜாதி பேதமில்லாமலும் மானிடமக்கள் சகலரும் சம அந்தஸ்துடன் வாழ்ந்து வரவேண்டுமென்ற நன்னோக்கத்தைக்கொண்டு வெளிஉலாவுகின்றது. வருடச் சந்தா ரூ 1—9—0

விலாசம்:— மானேஜர்,
'ஜாதிபேதமற்றோன்' ஆபீஸ்
பிராட்வே, சென்னை.

ஜனானுகூலன் இந்த தஞ்சையிலிருந்து பிரதி சனிக்கிழமை தோறும் பிரசுரிக்கப்படும் தமிழ்ப்பத்திரிகை. அதில் கைத்தொழில், குறிப்பு, வியாபார விஷயம் முதலிய பொது விஷயங்கள் பல அடங்கியிருக்கிறது. இது சுமார் 36வருடங்களாக சிறிதும் தளர்ச்சியின்றி விடாமுயர்ச்சியுடனும் ஊக்கத்துடனும் மகாஜனங்கள் மத்தியில் உழைத்துக்கொண்டுவருகிறது. வருடச் சந்தா ரூ 3-0-0

பிஸ்கட், உலகப்பட்டி, பெரிய கம்பெனியாரிடமிருந்து (Perry & Co·) ருசியாகவும் கெட்டியாயும், அழகாயும் நல்ல முறையில் தயாரிக்கப்பட்ட தகரடப்பாவில் அடக்கஞ்செய்யப்பட்ட நயம் நயிஸ் பிஸ்கட் நமது பார்வைக்கு வரப்பெற்றோம். இது நல்ல ஆங்கிலேய முறையில் தயார்செய்ய தேர்ச்சிபெற்றவர்களைக்கொண்டே தயார் செய்திருப்பதாகத் தெரிகிறது. மெய்மணம் வீசும் கீர்த்தியை ஈண்டு விஸ்தரிக்க இயலாதென விடுத்தோம். தின்னத் தின்ன தித்திப்பும், நாவுக்குருசியும் நற்மணமும் கொடுக்கிறது. இக்கம்பெனியாரால் தயாரிக்கப்பட்ட டின் பெட்டியில் எத்தனை நாட்காலமிருந்தாலும் அப்படியேயிருக்குமென்பதில் சந்தேகமில்லை. நீண்டகாலம் வைத்திருந்து உபயோகப்படுத்திக் கொள்ளக்கூடியவர்களுக்கு இது மிகவும் சௌகரியமாயிருக்கும்.

---

ஸங்கவில்லை. தியாகமூர்த்திகளாக வெளியேவேலைசெய்பவர்களையே தற்சமயம் உலகம்நம்புகிறது அவர்களையேபோற்றுகின்றது. அவர்களே தங்கள்தலைவர்களென மதித்து, அவர்களுடைய வார்த்தைக்கும் வாக்கியத்திற்கும் செவிசாய்க்கின்றது. ஆகையால் நமது குலாபிமானிகளான தலைக்கட்டுவரி வசூல் கமிட்டி முதலிய கமிட்டிமெம்பர்கள் தியாகமூர்த்திகளாக வெளியேறி வேலைசெய்வார்கள் என்றே நம்புகிறோம். ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடாரவர்களைக் கொண்டு,முக்கிய ஊர்களில் தலைக்கட்டுவரி வசூலிக்க ஏற்பட்டகமிட்டி கூடிய சீக்கிரம் வெளிச்சிலம்பி வேலைசெய்யப் போவதாக நமக்கு நற்செய்திகிட்டியிருக்கிறது. அதை வாஸ்தவமென்றே நாம் நம்பவேண்டியதிருக்கிறது. இக்கமிட்டியாவது மற்ற கமிட்டிகளுக்கு வழிகாட்டியாய் நின்று வேலைசெய்து காட்டுமானால் காடார் உலகம் போற்றி துதிக்கு மென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

# ஹிந்து தேவஸ்தான பரிபாலன மசோதா.

## ஆதித்திராவிடர்களின் ஆதரவு

சட்டசபை அங்கத்தினர் ராவ் சாகிப் எம். வி. மதுரைப்பிள்ளை பின் வருமாறு எழுதுகிறார்.

ஹிந்து தேவஸ்தான பரிபாலன மசோதாவைப்பற்றி வெளியிடப்பட்டு வரும் அபிப்பிராயங்களை நான் கவனித்து வந்திருக்கின்றேன். அதிலிருந்து ஜனங்கள் மசோதாவின் கொள்கையை ஒப்புக்கொண்டிருப்பதாகவும், உட்பிரிவுகளை மாத்திரம் ஆக்ஷேபிப்பதாகவும் தெரிகிறது. தனிக்கமிட்டியில் இந்தப் பிரிவுகளையும் எளிதில்மாற்றிவிடலாம். எல்லோரும்தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டுவரும் பொழுது ஆதித்திராவிடர்கள் தாங்களும் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடுவார்களென்றுஎதிர்பார்த்தேன் ஆனால் ஒருவரும் வெளியிடவில்லை ஆகவேஎங்கள்வகுப்பைச்சேர்ந்தவர்களுடன் இதைப் பற்றி கலந்துயோசித்தேன் தாங்கள் ஏகமனதுடன் மசோதாவை ஆதரிப்பதாகவே அவர்கள் சொன்னார்கள். இதில் எனக்கு ஒரு சந்தேகம் மாத்திர முண்டாயிற்று. தேவஸ்தானங்களில் மிகுதிப்பணத்தைச் செலவழிப்பதில் ஜாதிவகுப்பு வித்தியாசம் பாராட்டப் படுமென்று எனக்குச் சந்தேகப் பட்டது ஆகவே ஜாதி வகுப்பு வித்தியாசமின்றி தர்ம சொத்துக்களில் நன்மையை எல்லோரும் விதித்து ஏற்படுத்த வேண்டு மென்று ஒரு பிரிவை மசோதாவில் சேர்க்கலாமென்று நினைத்தேன்.

இதைக் குறித்து தான் எனக்குப் பயமேற்பட்டது. அதற் கேற்றதாகவே சென்ற ஞாயிற்றுக்கிழமை சவுந்தரிய மஹாலில் நடை பெற்ற பொதுக் கூட்டத்தில் சிவஞர் ஸ்ரீமான் ஷண்முக முதலியார் பேசுகையில் நானும், ஸ்ரீமான் இ. பெரியநாயகமும் தனிக் கமிட்டியில் ஸ்தானம் வகிக்க என்ன நியாயமிருக்கிறதென்று கேட்டார். பஞ்சமர்கள் கோயில்களுக்குள்ளாகப் பிரவேசிக்க அனுமதிக்கப்படாததினால் நான் கமிட்டியில் ஸ்தானம் வகிக்கக் கூடாதென்றும் ஸ்ரீமான் பெரியநாயகம் கிறிஸ்தவரானபடியால் அவர் அருகரல்லவென்றும்அவர் நினைத்தார் போலும். பஞ்சமர் கமிட்டியில் ஸ்தானம் வகிக்கவும், ஹிந்து சமூகத்திற்காக பொதுவாக இந்த மசோதாவில் அபிப்பிராயம் கொடுக்கவும் பஞ்சமர்களுக்கு அதிகார முண்டென்பதை ஸ்ரீமான் முதலியாருக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கோயில்களில் வகுப்பு வித்தியாசமின்றியே எல்லோரும் தொழுது வருகின்றனர் கோயில்களில் வைக்கப்பட்டிருக்கும் உண்டிகளில் எல்லா வகுப்பைச் சேர்ந்தவர்களும் பணம் போடுகின்றனர். ஸ்ரீமான் முதலியார் ராமாயாணம் பகவத்கீதை நாலாயிரப் பிரபந்தம் மற்றும் வேதங்கள் முதலியவைகளைப் படித்திருந்தால் அவைகளில் பஞ்சமர்கள் தெய்வங்களைத் தொழக் கூடாதென்றுவது அல்லது தர்மம் செய்யக்கூடாதென்றுவது சொல்லக் கூடுமா, திருப்பாணாழ்வார் நந்தனார் முதலியவர்கள் பஞ்சமர்களல்லவா? ஸ்ரீமான் முதலியார் தனிக் கமிட்டிப் பிரதிநிதிக் கமிட்டியாக விருக்க வில்லை யென்று சொல்லியிருக்கிறார். மாசோதாவில் அபிப்பிரயம் கொடுக்கப் பஞ்சமர்களுக்கும் உரிமை யுண்டென்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தேவஸ்தானங்களின் சொத்துகள் பொது ஜனங்களாலேயே தர்மமாகக் கொடுக்கப்பட்டிருப்பதால் மசோதாவைப் பற்றி யோசிப்பதற்குப் பொது ஜனங்களுக் கதிகார முண்டென்று நான் சொல்லுகிறேன். கடவுள் எல்லோருக்கும் பொது. அவர் பஞ்சமபக்தர்களுக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசம் பாராதவர். ஸ்ரீமான்முதலியார் இப்படிப் பேசியிருப்பதால் மசோதா சட்டமானபிறகு,ஒருகோயில் பஞ்சாயத்தார் கோயில்களின் மிகுதிப் பணத்தைப் பஞ்சமர்களின் உபயோகத்திற்குக் கொடுக்கக் கூடாதென்று சொல்லலாம். அதனால்தான் வகுப்பு வித்தியாசமின்றி தேவஸ்தானங்களில் மிகுதிப் பணம் செலவழிக்கப்படுமென்றபிரிவை மசோதாவில் சேர்க்கும்படியாக நான் ஆலோசனை சொல்லுகிறேன். உண்மையில் ஜன நாயகக் கக்ஷியான பிராமணரல்லாதார் கக்ஷியாகும் காங்கிரஸும் தீண்டாமையை ஒழித்து சுயராஜ்யம் ஸ்தாபிக்க வேண்டுமென்ற காலத்தில் ஸ்ரீமான் முதலியார் போன்ற சிலர் சொல்லுவதை நாம் பொருட்படுத்த வேண்டுவதில்லை.

ஃ. மி.

# ஐரோப்பியவர்த்தமானம்

## யுத்த முஸ்தீப்புகள்

### சமாதான மகாநாடு முறிந்து விட்டது.

1918-ஆம் வருஷத்தில் ஐரோப்பா யுத்தம் நின்றபிற்பாடும், கிரேக்கர்களும் துருக்கியர்களும், இடைவிடாது சண்டைசெய்து கொண்டிருந்தார்கள். பகையொழிந்த நீ சமாதானம்விட்டபாடில்லை என்றபடி மகாயுத்தம் நிறுத்தப்பட்டு விட்டபோதிலும் சில்லரைச் சண்டைகளும் நாட்டுக் குழப்பங்களும் குறைவில்லாமலிருந்தது. மகாயுத்தம் நடந்தபோது கடலடைப்பு வேலைநிறுத்தம் முதலியவைகளால் உலகத்தவர்கள் கஷ்டப்பட்டதுபோல் இச் சிறு சண்டைகளால் ஏற்படாவிட்டாலும் சிற்சில அசௌகரியங்களும் வசதிகுறைகளும் ஏற்படாமல் போகவில்லை.

#### துருக்கி.

மகா யுத்தத்தின்போது துருக்கியர்கள் ஜெர்மானியர்களோடு சேர்ந்து சண்டை செய்து தோல்வியுற்றவர்களானகையால், இதர நமது நேசதேசங்களைக்காட்டிலும் அதிக தளர்ச்சியும் மூயர்ச்சியுமுற்றவர்களாய், பொருளாதாரம் மிகக் குன்றி, மிகுதியும் களைப்புற்று தயங்கிக் கொண்டிருந்தார்கள். ஆயினும், மகாயுத்தம நின்றதற்பிற்பாடும், தங்களை எதிர்த்து சண்டைமுஸ்தீப்புகள் செய்துகொண்டிருந்த கிரேக்கர்களையும் விடாது எதிர்த்து சண்டை செய்துகொண்டு வந்தார்கள். ஆனல், கிரேக்கர்களுக்கு ஒத்தாசையாக பிரிட்டிஷ், பிரான்சு முதலிய நேசதேசத்தார்கள் துருக்கிக்கு விரோதமாக கிரேக்கர்களுக்கு அந்தரங்கமாக உதவி செய்துகொண்டிருந்ததாகவும், பகிரங்கமாக கிரேக்கர்களுடைய வெற்றியைப் அபிமானத்துடன் எதிர்பார்த்துக்கொண்டு நடுநிலைமை வகிப்பதுபோல், நேசதேசங்கள் பாசாங்குசெய்து கொண்டிருந்ததாகவும் சொல்லப் படுகிறது. இதை உற்றுநோக்குமிடத்து இரண்டு ஆடுகள் மூளை சிதற, இரத்தப்பெருக்குடன் ஒன்றை ஒன்று முட்டிக்கொண்டிருக்க மத்தியஸ்தராக வந்துநடுவிலிருந்துகொண்டு அவைகளின் மூளையும்இரத்தத்தையும் சாப்பிட்டுக்கொண்டிருந்த குள்ளநரியின்கதையை ஒக்கும் கடையில் உலகம் பேசும்படியும் பேல்ராமேனின் செல்வாக்கு காலம்கொஞ்சம்கொஞ்சமாக இறங்கவே ஜனப்பட்டுவிட்டார். திகாலம்மறுபடியும்எழுச்சிக்கு அறிகுறியாகவும் துருக்கியர்கள் வெற்றி மாலைசூடிநின்றார்கள். இதற்கு காரணம் ஆசியாவிலுள்ள துருக்கியர்களான கமாலியர்கள் என்றதுருக்கி தேசியவாதிகள் அங்கோரா என்ற இடத்தில்ஓர் கவர்ன்மெண்டை அமைத்துக்கொண்டு,மகாயுத்தத்திற்கு பிற்பாடு நேசதேசங்களோடு துருக்கி சுல்தான் செய்துகொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை சமாதானஉடன்படிக்கை முதலியவைகள் தங்களைக்கட்டுப்படுத்தாததுபோலவும் பலத்த கிளர்ச்சிகளுடனும், வீராவேசத்துடன் கிரேக்கர்களுடன் சண்டைசெய்து கிரேக்கப் படைகளை ஆசியாவிலிருந்து முறியடித்துவெருட்டினார்கள்.

#### துருக்கிப் படைத் தலைவர்.

துருக்கியர்கள் ஆசியாவில் வெற்றியடைவதற்கு ஆதிகாரண புருஷர், மிஸ்டர் காசிமுஸ்தபா கமால்பாஷா என்ற மணமுடியாத துருக்கி வீரரே. இப்போது இவரை உலக மெங்கும்போற்றி துதிக்கப்படுகிறது. இவரை ஆசியா நெப்போலியன் போனபாட் என்றும் அபிமான பெயரிட்டு அழைக்கிறார்கள். இவரே தற்சமயம்துருக்கி அங்கோராகவர்ன்மெண்டுக்கு முக்கியஸ்தராக விளங்குகிறார். இவர் சண்டை எல்லாம்முடித்துவிட்டு, கடந்த இரண்டு மாசகாலத்திற்கு முன்புதான் ஒரு அழகிய கன்னிகையை கலியாணம் செய்துகொண்டார். மணமகள் ஒரு பிரபுடைய குமாரத்தியாம். அந்த பிரபு,தன் மகளுக்கு சீதனமாக 150000 பவுன் கொடுத்திருக்கிறார்.

#### கிரீஸ்.

கிரேக்கர்கள்,மகாயுத்தத்திற்கு பின், நேசதேசத்தாருடைய அந்தரங்கஉதவியையும் ஊக்கத்தையும் வைத்துக்கொண்டு துருக்கியர்களுடன் சண்டையெய்து அவர்களை அதோகதியாய் அழ்த்தி, இனி துருக்கி என்ற நாமதேயமே இல்லாமல் செய்து விடவேண்டு மென்ற கெட்ட எண்ணத்துடன் சண்டைக்குமுற்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. அது வாஸ்தவமாயின், கெடுவான்கேடு நினைப்பான் என்ற முதுமொழிமுற்றும் நிதரிசனமாகிவிட்டது என்று ஈண்டு குறிப்பிட வேண்டியதில்லை. கிரேக்கர்கள் கடைசியில் தோற்றுப் போனார்களாயினும், துருக்கியர்களுக்கு பெருத்த சேதத்தை விளைவித்துவிட்டார்கள். ஆசியாவிலுள்ள துருக்கி ராஜியத்திற்குள்பட்ட ஸ்மர்னா வென்ற பிரதேசத்தில் கிரேக்கர்கள் துருக்கி பிரதம சேனாதிபதியான கமால் பாஷா படையின்முன் நிற்கமுடியாமல் பின்வாங்கிப்போகும்போது அந்தபிரதேசத்தை கொள்ளையடித்தும் முக்கிய கட்டடங்களை இடித்தும் தீய் வைத்தும் பாழ்படுத்தினார்கள். இது யுத்தமுறைக்கே விரோதமானது என்று உலகம்பழித்துரைத்தது கடைசியில் கிரேக்கர்கள் தோல்வியுடன் ஆசியாவைவிட்டுப் போகும்படிநேர்ந்தது. துருக்கி சேனாதிபதியானகமால் பாஷா அவர்களைவிடாமல்தொடர்ந்து துரத்திக்கொண்டு ஐரோப்பாவிலுள்ள துருக்கிநாட்டையும் காக்கும் பொருட்டு ஐரோப்பாவிற்கும் ஆசியாவிற்கும் இடையிலிருக்கும் டாடனல்ஸ் ஜலசந்தியைக்கடந்துசெல்லப்புறப்பட்டார். பின்னும் ஐரோப்பாவிற்குச் சென்று கமால்பாஷா வெற்றிமாலைசூடி நிற்பாரானல், நேசதேசத்தார்கள் மகா யுத்தத்தின்போது, ஜெர்மனியை ஜெயித்து அதன்பயனாக ஏற்பட்ட பலாபலன்களை யெல்லாம் இழக்கும்படி நேரிடுமென்றெண்ணி, தேசத்தார்கள் உடனே சண்டைக்குத் தயாராக வேண்டியதிருக்குமென்று, மாஜிபிரிட்டிஷ் பிரதமமந்திரியான மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் அபிப்பிராயப்பட்டு அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தார்.

#### கிரேட் பிரிட்டன்.

தொழிலாளர்கள் நிறைந்த நாடாகிய நமது இங்கிலாந்து தேசமானது இடைவிடாது யுத்தம் என்ற வார்த்தையை கேட்டவுடனே திடுக்கிட்டுப் போயிற்று. மகாயுத்தத்தின்போது, வேலை நிறுத்தம் தொழிலில்லாமை முதலிய வைகளால் கஷ்டப்பட்டதால் சண்டை என்ற வார்த்தையையே கேட்கப்பிரியப்படாதபிரித்தானியார்களின் மனோநிலைமையை அறியாமல் மாஜி மந்திரியான மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில்

## சென்ஸஸ் குறிப்புகள்

### இராமனாதபுரம் ஜில்லா.

இராமனாதபுரம் ஜில்லா மொத்தம் 4833 சதுர மைலில்கள் அளவுள்ளது இச்சில்லாவில் 25 டவுன்களுக்கு 3505 கிராமங்களும் இருக்கின்றன 348240 வீடுகள், இருக்கின்றன. சென்ற சென்ஸஸ் ரிப்போட்டைக் காட்டிலும் பிரஸ்தாப சென்ஸஸ் ரிப்போட்டில், 54380 அதிக ஜனத்தொகையாயிருக்கிறது.

| | |
|---|---|
| ஷை ஜில்லாவின் மொத்த ஜனத்தொகை ... ... | 1741837 |
| ஆண்கள் ... ... | 818619 |
| பெண்கள் ... ... | 903218 |
| கலியாணமானவர்கள் மொத்தம் | 734655 |
| ஆண்கள் ... ... | 343629 |
| பெண்கள் ... ... | 391026 |
| கலியாணமாகாதவர்கள்மொத்தம் | 789229 |
| ஆண்கள் ... ... | 437307 |
| பெண்கள் ... ... | 351922 |
| விதவைகள் ... ... | 160270 |
| தாரமிழந்தவர்கள் ... ... | 37683 |
| இந்துக்கள் ... ... | 1520566 |
| மகமதியர்கள் ... ... | 116156 |
| கிறிஸ்தவர்கள் ... ... | 85102 |
| இதரமதஸ்தர்கள் ... ... | 13 |
| படித்தவர்கள் மொத்தம் ... | 186425 |
| ஆண்கள் ... ... | 173512 |
| பெண்கள் ... ... | 12913 |
| ஆங்கிலேயம்படித்தவர்கள் | 9587 |
| ஆண்கள் ... ... | 9074 |
| பெண்கள் ... ... | 513 |
| **இந்துக்கள்** | |
| இருபாலர்களிலும்படித்தவர்கள் | 162764 |
| ஆண்கள் ... ... | 153168 |
| பெண்கள் ... ... | 9596 |
| ஆங்கிலேயம் படித்தவர்கள் | 8042 |
| ஆண்கள் ... ... | 7861 |
| பெண்கள் ... ... | 181 |
| **மகமதியர்கள்** | |
| இருபாலர்களிலும் படித்தவர்கள் | 12396 |
| ஆண்கள் ... ... | 11696 |
| பெண்கள் ... ... | 800 |
| ஆங்கிலேயம் படித்தவர்கள் | 322 |
| ஆண்கள் ... ... | 283 |
| பெண்கள் ... ... | 39 |
| **கிறிஸ்தவர்கள்** | |
| படித்தவர்கள் ... ... | 11258 |
| ஆண்கள் ... ... | 8741 |
| பெண்கள் ... ... | 2517 |
| ஆங்கிலேயம் படித்தவர்கள் | 1222 |
| ஆண்கள் ... ... | 929 |
| பெண்கள் ... ... | 293 |

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

குள்பட்ட கானடா நியூஸிலாண்டு, இந்தியா முதலிய நாடுகள் சண்டைக்கு ஆயத்தமாகும்படி, ஆக்ஞாபித்தார். உடனே பிரிட்டிஷ் ஜனங்கள் மிஸ்டர் லாயிட் ஜார்ஜியையும் அவருடைய கவர்ன்மெண்டையும் வெறுத்தார்கள். அதிலிருந்து தேசத்தில் அவருடைய செல்வாக்கு குறைந்தபடியால் அவரும் தன்னுடைய பிரதமமந்திரி பதவியை ராஜினாமாசெய்ய, புதியபார்லிமெண்டு சேபையும் ஏற்படுத்தப்பட்டு, மிஸ்டர் போனர்லா பிரதம மந்திரி பதவியை அடைந்திருக்கிறார். போதுவாக லகப்சமாதானத்தை யோசிக்கின்றதாகையால், பிரான்சு, இட்டாலி, பெல்ஜியம் முதலிய தேசங்கள் யுத்தத்திலிறங்க மறுத்துவிட்டன. ஆகையால் மீண்டும் துருக்கிய யுத்த நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்பின் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளும் பொருட்டு சென்ற 1922ஹு நவம்பர் மாதத்தில் ஸ்விட்ஸர்லாண்ட் தேசத்து முக்கிய பட்டணமாகிய லாஸேனில் நேசதேசத்தார்களும் கிரேக்கர்களும் துருக்கியர்களும் கூடினார்கள். இதுபோதைக்காலங்களாக சமாதான நிலைமைபெறுமோவென்று லாசேன் மகாநாட்டின் நடபடிக்கையை ஒவ்வொரு தேசத்தாரும் அதிக ஆவலுடன் எதிர் நோக்கிக் கொண்டிருந்தார்கள். கடைசியில் சென்ற வாரத்தில் மகாநாடு யாதொரு முடிவுமின்றி முறிந்து போய்விட்டதாகத் தெரிகிறது. இந்த மகாநாட்டில் துருக்கியர்கள் பிடிவாதத் தடனில்லாமல் அதிகமாகவிட்டுக்கொடுத்து பெருந்தன்மையுடன் நடந்து கொண்டதாயும்சொல்லப்படுகிறது. மறுபடியும் ஐரோப்பாவில் யுத்தம் ஆரம்பிக்கப்படுமானால் அது ஐரோப்பாவின அழிவுகாலந்தான் இதற்கு சந்தேகமில்லை. இது இப்படியிருக்க, ஐரோப்பாவின் மற்றொரு பக்கத்தில் பிரான்சு, பெல்ஜியம் முதலிய தேசங்கள் ஜெர்மனியை சூழ்ந்து கொண்டிருக்கின்றன.

(இன்னும்வரும்)

## அருப்புக்கோட்டையில் ஓர் அதிசயம்.

நாளது 8-2-23 தேதி வியாழக்கிழமை இராத்திரி 3½ மணி சுமாருக்கு ஒரு நாடார் கனவான் வீட்டு வாசல்படியில், அன்றிரவே அரைமணி நேரத்திற்கு முன் பிறந்த குழந்தையை யாருக்கும் தெரியாமல் கொண்டுவந்து கடும்பனியில் யாதொரு துணிமுதலிய ஆதரவுமின்றி உயிரோடு போடப்பட்டிருக்கிறது. குழந்தையானது பனியின் கொடுமை சகிக்கமுடியாமல் வீறிட்டு அழத்தொடங்கிய உடனே, வீட்டுக்குள்ளிருந்த அந்த கனவான் விழித்துக்கொண்டு, குழந்தையின் அழுகைக் கூக்குரலானது சமீபத்தில் கேட்பதையும், அது, குழந்தையின் குரல்தானா! அல்லது பூனைகள் சிலவேளையில் குழந்தைகளைப்போல கத்துவதுமுண்டு என்று ஐயமுற்றவராய் சிறிது நேரம் மறுபடியும் உற்று கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, கடைசியில் ஒருவாறு சந்தேகம் நீங்கியவராகிய தனது மனைவியை எழுப்பி அந்த அழுகைக்குரலை கவனிக்கும்படி சொல்ல, இருவரும் கதவை திறந்துபார்க்க, அது உண்மை குழந்தையாகவும் கைகால்களை ஆட்டிக்கொண்டு வீறிட்டு அழுவதையுங்கண்டு, ஆனந்தமும் ஆச்சரியமும் கொண்டவர்களாய் குழந்தையை எடுத்துப்பார்க்க, அது ஓர் ஆண் குழந்தையாகவும் அப்போதுதான் பிறந்ததாகவும், அது பிறந்த உடனே மருத்துவச்சியால் செய்யப்படும் கிரிகைகளைக்கூட செய்யப்படாமலிருப்பதையுங் கண்டார்கள். உடனே செய்யவேண்டியவைகளெல்லாம் செய்துமுடித்து குழந்தைக்கு சேனைபால்முதலிய ஆகாரங்களை ஊட்டி ஆதரித்துவருகிறார்கள். குழந்தை நல்ல சுகத்துடன்தானிருக்கிறது. அந்தக் கனவானுக்கும் இதுவரையும் குழந்தைபாக்கியம் இல்லாததால், கடவுளே அவர்களுக்கு அந்த குழந்தையைகொண்டுவந்து கொடுத்ததுபோல் எண்ணி, அவர்களடையும் ஆனந்தத்திற்கோரளவேயில்லை. இந்த அதிசய ஆகாய வீமனை ஜனங்கள் திரள்திரளாகவந்து தெரிசித்து செல்லுகிறார்கள். அந்தக் கனவான் வசிக்கும் தெருவே ஒரு திருவிழாக் கூடமிடம்போலிருக்கிறது. நமது அதிசய ஆகாய வீமனுக்கு ஆண்டவன் நீடிய ஆயுளை அருள்புரிவதோடு, இவன் பிறந்த இன்றே பிறக்கியாதியுடன் ஆயிரக்கணக்கான ஜனங்கள் தெரிசிக்கும்படி நேர்ந்தது போல், இவன் பிற்கால வாழ்விலும் மகாஜனங்கள் போற்றித்துதிக்கும்படி சிறப்புற்றிருக்க, கிருபை கூர்ந்தருளவேண்டுமென்றும் பிரார்த்திக்கிறோம்.

விகடன்

## உபாத்திமைத் தொழிலும் சில உயர் லட்சியங்களும்.

தற்கால நாகரீகத்தின் போக்கைக் கவனிப்பார் எவரும் ஒவ்வோர் துறையிலும் சீர்திருத்தம் வேண்டுமென்றஎண்ணமும் முயற்சியும் ஜனசமூகத்திற் பிரபலமடைந்து வருவதை உணர்ந்திருப்பர். இச்சீர்திருத்த விளர்ச்சி சகல நாடுகளிலும் சகல இலாக்காக்களிலும் தென்படுகின்றது. ஆதலின் கல்வித் துறையிலும் நானாதேசங்களிலும் புதியதோர உயிர்த்துடிப்புத் தோன்றியிருப்பது வியக்கத்தக்கதல்ல.

சென்ற சில வருஷங்களாய், வித்தையைப் பெறும்மாணவர்கள் மாணவிகளது இயல்பைப்பற்றி நாம் கொண்டிருந்த பண்டைக்கொள்கைகள் பிள்ளைகள் கற்றவரும் பாடவிஷயங்கள், உபாத்தியாயர்கள் அவற்றைப் போதிக்கும் முறைகள், அப்போதனைக்குரிய உபகரணங்கள், உபாத்தியாயர் வித்தியார்த்திகள் ஆகிய இவர்களுக்குள்ள பரஸ்பரசம்பந்தத்தைப் பற்றிய அபிப்பிராயங்கள் இவையனைத்தும் மிகவும் மாறுபாடடைந்து வந்திருக்கின்றன. அன்றியும், கல்வித்துறையில் சோம்பற்பட்டுப் படாதவர்களும் கூட இவ்விஷயத்தை ஊன்றிக்கவனிக்க வேண்டுமென விரும்புவது நாம் குறிக்கத்தக்க விஷயமாகும்.

பிராசீன இந்தியாவில் அனுசரிக்கப்பட்டுவந்த குருகுலவாசமென்னும் வித்தியாப்பியாஸ முறை மிகச் சிறப்புவாய்ந்ததென்பது உலகறிந்ததொன்று. ஆயினும், அந்நாளில் நமது நாடு இருந்த நாடுகளும் இருந்த நிலைமைக்கும் தற்போது அவையுள்ள நிலைமைக்கும் பேதம் அதிகமுள்ளது. அதனைப் பற்றி இங்கு விஸ்தரிப்பதற் கிடமில்லை. பல காரணங்களைக்கொண்டு பழயநாகரீகம் மாறிப் புதியதோர் நாகரீகம் உலகிற்றோன்றியுள்ளது. இதனை நாம் வெறுத்தலாற் பயனில்லை. இத்தகைய பெரும் மாறுதவினின்று வெளிவரும் ஈசுவர சங்கற்பம் யாதென அறிதலே மெய்யறிவுடையோர் கடமையாகும்.

குருகுலவாசம் இந்தியாவில் வழங்கிய காளில் சத்தியம், சாந்தம், பிரேமை உற்சாகம், விவேகம், திராசை முதலிய குணங்கள் வாய்ந்த உபாத்தியாயர்கள் இருந்தனரென்று விளங்குகின்றது. நாகரீகம் பலவிதங்களில் மாறிவருகின்ற இக்காலத்தும் இத்தகைய உயர்லட்சியங்கள் கொண்ட மனமுடைய உபாத்தியாயர்களே தேவையென்பது யாவர்க்கும் கூறாமலே விளங்குவதாகும். அன்றேல், நமது சமூதாய வாழ்வின்பெருமை இன்னும் குன்றிவிடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அறம், பொருள், இன்பம், வீடென்ற நால்வகைப் புருடார்த்தங்களையும் அளிக்கவல்ல கல்வி என்னும் அழியா அகப்பொருளை ஜனசமூகத்தார் உபாத்தியாயர்கள் மூலமாய் விக்கிரயஞ்செய்யவேண்டிவந்து விட்டது. ஆயினமையின் இக்காலத்திலன்றோ அதனை முழுதும் இலௌகீகத்தொழில்களிலொன்றாய்க் கருதாது வைதீக நோக்கத்துடன் சிராய் நடாத்தும் செல்வர்கள் தேவை! இந்தியஉலகம் இதனை எப்பொழுது நன்குணரும்?

ஆழ்ந்த அறிவுடைய ஆஸ்திகபுத்தி நமது நாட்டு உபாத்தியாயர்களிடம் பலப்பட்டு நிற்குமாயின் கல்வி கற்பித்தல் ஈசுவர கைங்கர்யமென்று ஞாபகம் அவர்கட்கு எளிதில் ஏற்படும். அப்பொழுது அன்னார்செய்யும் தொழில் ஜீவனோபாயமாக மாத்திரம் கருதப்பட்டுச் செய்யப்படமாட்டாது. அத்தகைய உபாத்தியாயர்கள் தம்தொழிலையும் தம் கலாசாலையையும், தம் மாணவர்களையும் தம்முடன் சேர்ந்து வேலைசெய்யும் பிறஉபாத்தியாயர்களையும் நேசிப்பார்கள். அப்பொழுது அக்கல்விச்சாலை கலைமகள் ஆலயமாகும். சாந்திநிலையமாகும். அப்பொழுது அவர்கள் நடாத்திவந்த தொழிலும் புதியதோர்சோபை(ஒளி)பெற்றுவிளங்கும். தம் தொழிலை நேசியாதார்க்கு இஃது ஒரு போதும் சாத்தியமாகாது.

மேலன்ன ஈசுவரபக்தியும் உயர்லட்சியமுங்கொண்ட உபாத்தியாயர் தம்மிடம் கல்விபயிலவரும் வித்தியார்த்திகளொவ்வொருவரும் இறைவனிடமிருந்து தோன்றிய ஓர் ஜீவாத்மாவெனத்தெளிந்து, அவர்களது இயற்கையில் மறைந்து கிடக்கும் இச்சாசக்தி, ஞானசக்தி கிரியாசக்திமுதலிய மூன்று சக்திகளையும் வெளிப்படையாய்த் தோற்றுவிக்கத் தம்மால் இயன்றவரை உதவுவார். ஆயினும், குழந்தைகளின் தர்மம் வேறெனவும் தனது தர்மம் வேறெனவும் அவர் நன்கறிவார்.

அன்றியும், ஈசனது சங்கற்பசக்தியொன்றே யாவர் சங்கற்பத்திற்கும் மேலாய் உலகில்நின்று நிலவுகிறதென்றும், அச்சங்கற்பத்திற் கிசைந்து நாம் நடத்தலே நீடித்த பேரின்பவாழ்விற்கு வழியாமென்றும் அவர்கண்டு தம்மாணவர்கட்குணர்த்துவார். குழந்தைப் பருவத்தின் இனிமையையும் மெய்வனப்பையும், மாசற்ற சுத்த சாத்வீகஇயல்பையுங்கண்டு, இவையனைத்தும் இறைவனது கல்யாண குணங்களெனவறிந்து அவற்றைப் போற்றி வளர்த்தல் இறைவன்றொண்டெனவும்கொள்வார்.

தம்மாணவர்கள் அறிவும் ஆனந்தமும் பெறுவான்வேண்டி, அவர்கள் வித்தை பயிலுங்காலே, கிரீடாரூபமானவேலைகளையவரவர்சித்தத்திற் கிசைந்தவாறு அவர்களுக்குஇட்டு அவர்களையுற்சாகப்படுத்துவார். தமது மாணவர்களுடைய சுகதுக்கங்களிலெல்லாம் அவர்களோடு தாமும்ஒன்றாக தமது முதிர்ந்த அனுபவத்தாலும் அறிவாலும் அன்பாலும் அவர்களைத்தேற்றி தைரியப்படுத்தி அன்னாரிடம் தன்னம்பிக்கை, தன்முயற்சி, தன்னடக்கம், தன்மதிப்புமுதலிய குணங்கள் உண்டாகுமாறு செய்தலே தம்தொழிலின் வெற்றியெனக்கொண்டுழைப்பார். தமது மாணவர்களின் ஸ்தூலசூக்குமசரீரங்கள்பலமும் தூய்மையும் அழகும் பெற்று நின்று அவற்றிற்கு எஜமானனான ஜீவாத்மா, தான்கருத்திற்கொண்டவெண்ணம்நிறைவேறி உலகினோடு அவன் ஐக்கியமுறப் பழகும்விதமாய்அக்கோசங்களை அச்சீவன் அடக்கியாள உதவுதலே உபாத்தியாயர் கடமையென்று இவர் அறிவார். மேற்குறித்த கருத்துநிறைவேறுமாறு, நவீன நாகரீகத்திற் செறிந்துகிடக்கும் பல (சப்த, ஸ்பரிச, ருப சம்பந்தமான) பொருள்களின் உதவியைநாடி, நமது மாணவர்களின் ஜீவன் துரிதபரிபாகமடையும்படியான வழிகளை யெக்காலும் தேடுவார். தம் மாணவர்களிடமுள்ள தெய்வீக சக்தியைத்தாம் எழுப்பவேண்டுமாயின் தாமே தம்மிடமுள்ள தெய்வீககுண சம்பத்துக்களைப் பிரகடனஞ்செய்விக்க வழிதேடுதல்வேண்டுமெனவும தான் நன்கறிந்து இவர் உழைப்பார். கல்வித்துறையில் இதுவன்றோ ஆத்மக்ஞான வழியாகும்! இத்தகைய மேன்மையால் நோன்புகொண்ட உபாத்தியாயர்களன்றோ உலகின் புதுவாழ்விற்குக்காரணமாவார்கள். இத்தகையஆசிரியர்களன்றோ ஸ்ரீஜகத்பதியாம் பேராசிரியனது அன்பிற்கும் அனுக்கிரகத்திற்கும் பாத்திரவான்களாவார்கள். இறைவனருளால் இப்பெருங்கனவு கனவாகுங்காலம் கிட்டுவதாக. சுபம்!

ரா. பஞ்சாப்கேசய்யர், கூடம்பூர்.

## நாடார் மகாஜன சங்கமும், பிரசாரமும்.

### நாடார் மகாஜன சங்கம் மதுரை கௌன்ஸில் மீட்டிங்கு.

நாளது துந்துபிஹு மாசிமீ 7உ (18-2-23) ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு சங்கம் ஆபீஸில் நடைபெறும். அவ்வமயம் அநேக முக்கிய விஷயங்களைப் பற்றி ஆலோசிக்கப்படும். கௌன்ஸில் மெம்பர்கள் தவராது விஜயஞ் செய்ய கேட்டுக்கொள்ளுகிறோம்.

மதுரை 8—-—23. } காரியதரிசிகள்.

• • •

### நாடார்மகாஜன சங்கப் பிரசாரம்.

நாங்குநேரித் தாலுக்காவில் அதிகமாய் நாடார்களேவாசஞ்செய்துவரக்கூடிய பெருங்கிராமங்கள் இருக்கிறது. என்றும், இதுவரை நாடார்களுக்குள் மகாஜனசங்கம் இருப்பதாகவும் அதன் மூலமாய் அநேக நற்காரியங்கள் நடத்தப்பட்டு வருகிறதென்பதும் தோன்றாக் கிராமங்கள் அனேகமிருக்கிறது. தற்போது இரண்டு மாதகாலமாய் நாடார் மகாஜன சங்கம் கௌரவபிரசாரகரும் பாண்டியகுலதீபம் பத்திராதிபருமான ஸ்ரீமான் K. S. அருணகிரிநாடார் அவர்கள் இவ்வட்டகைகளில் விஜயஞ்செய்து அநேக கிராமங்களில் வரவேற்கப்பட்டு நாடார்களுக்குள் பெருங்கூட்டங் கூட்டிவைத்து நமது முற்கால தற்கால நிலைமைகளைப்பற்றியும், நாடார் மகாஜன சங்கத்தின் நற்காரியங்களைப்பற்றியும், வெகு சவிஸ்தாரமாய் உபந்நியாசித்ததிலிருந்து நாடார்களுக்குள் ஏற்பட்டிருந்த கக்ஷிப்பிரதி கக்ஷிகளெல்லாம் ஐக்கியத்துடன் தீர்ந்துபோனதுமல்லாமல், ஊரூராய் கிளைச்சபைகள் ஸ்தாபகஞ்செய்து அவைகளை தாய் சங்கத்துடன்சேர்த்து ரிஜிஸ்தர்செய்தும் மகாஜன சங்கத்திற்கு ஏராளமான அங்கத்தினர்களும் தலைக்கட்டு வரிகளும் வசூலாகிக்கொண்டேவருவதால் இவ்வட்டகைகளில் புதிய ஊக்கமும் ஒழுக்கமும் அதிகரித்துவருகிறது. ஆகவே இப்பக்கங்களில் நாடார்கள் வாசஞ்செய்யக்கூடிய அநேக பெருங்கிராமங்களிருக்கிறபடியால் இக்கனவானே இன்னும் ஆறுமாதகாலமேனும் சுற்றுப்பிரயாணஞ் செய்வதாயிருந்தால் இப்பக்கத்தில் நமது தாய் சங்கத்திற்கு ஏராளமான அங்கத்தினர்களும் தலைக்கட்டுவரிகளும் வசூலாவதுடன் அனேக நற்காரியங்களும் நடைபெறக்கூடும். ஆகவே இவைகளை எல்லாம் நமது நாடார்மகாஜன சங்கம் காரியதரிசிகள் கவனித்து அவ்விதம் நடைபெறச்செய்யவேண்டுமென காவல்கிணறு ஸ்ரீமான் S. A. சவரிமுத்து நாடார் எழுதுகிறார்.

• • •

### குளத்தூர்.

இவ்வூருக்கு நாடார் மகாஜன சங்கம் பிரசாரகர் ஸ்ரீமான் K. M. கோபாலசாமி நாடார் அவர்கள் 24-1-23ல் விஜயஞ் செய்தார்கள். அன்னவர்களை உபசரித்து அன்றிரவு சுமார் 7மணிக்கு இவ்வூர் நாடார் ஐக்கிய சங்கத்தில் ஆதரவில் மேலக்கடைபஜாரில் ஸ்ரீமான் சி. பு. ம. கா, இராமய்யநாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஓர் பொதுக்கூட்டம் கூடியது. மறுதினம் நம் சங்கத்திற்கு டையசந்தா ரூ 6 ஆறு வசூல் செய்து பிரசாரகரிடம் கொடுத்து சங்கம் ரசீது பெற்றிருக்கின்றோம். நம் சங்கம பிரசாரகர் ஸ்ரீமான் K. M. கோபால்சாமி நாடார் அவர்கள் 26-1-23ல் பிரசாரவிஷயமாக மெம்பார் சேர்த்துக்கிறார்கள் என்று ஸ்ரீமான் வ. யி. இராமசாமி நாடார் எழுதுகிறார்.

• • •

### ஆவரைகுளம்.

நாங்குநேரி தாலுகா வடக்கன்குளம் போஸ்டு ஆவரைகுளத்திற்கு நாடார் மகாஜனசங்கம் பிரசாரகர் ஸ்ரீமான் ஆ. சி. முத்தையாநாடாரவர்கள் 28-1-23ல் விஜயம் செய்திருந்தார்கள். டையாரை அன்புடன் வரவேற்று உபசரிக்கபெற்றது. அன்றிரவும் 31-2-23லும் பிள்ளையார் கோயில் சன்னதியில் ஸ்ரீமான் அ. து. சி. முத்துநாடாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. அதன்பின் க்ஷத்திரிய நாடார் பரிபாலன சங்கமென்ற நாமதேயத்துடன் ஒரு கிளைச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு டை சங்கத்திற்கு உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். டை கிளைச்சபையைநமது மகாஜனசங்கத்தோடு ரிஜிஸ்டர்செய்ய சந்தா ரூ 3ம் அங்கத்தினராக சேர்ந்த ரூ 16ம் ஆக ரூ 19 கொடுத்து பிள்ளையார்குடியிருப்புக்கு அனுப்பியிருக்கிறோம் என்று ஸ்ரீமான் மா. சா. சிதம்பரநாடார் எழுதுகிறார்.

• • •

### பத்திநாதர்புரம்.

திருநெல்வேலி ஜில்லா வடக்கன்குளம் போஸ்டைச் சேர்ந்த பத்திநாதர்புரத்திற்கு மகாஜன சங்கம் பிரசாரகர் ஸ்ரீமான் ஆ. சி. முத்தையநாடாரவர்கள் 24 1-23, 25-1-23 தெய்திகளில்விஜயஞ் செய்திருந்தார்கள். அன்புடன் வரவேற்று உபசரிக்கப்பட்டது. அன்றிரவுகளில் சுமார் 8மணிக்கு ஆசீர்வாதப்பர்கோயில் முன்பாக முற்கால தற்கால நிலைமை என்பதைபற்றியும் சங்கத்தின்நோக்கம்என்னவென்பதைப் பற்றியும் ஸ்ரீமான் சு. சின்னப்ப நாடாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீமான் M. மதுரேந்திர நாடாரவர்களும பிரசாரகர் ஸ்ரீமான் ஆ. சி. முத்தையா நாடாரவர்களும் உபந்நியசித்தார்கள். அதில் ஏராளமான ஸ்திரீ புருடர்களும் விஜயஞ்செய்திருந்தார்கள். முன்ஏற்படுத்தியிருந்த சங்கத்தை முன்போலபடியும்புதுப்பித்துதொடர்ந்துநடந்துவரும்படியான ஏற்பாடுகள்செய்யப்பட்டன. நம் மஹாஜன சங்கத்திற்கு அங்கத்தினராக 14பேர் சேர்ந்ததுமல்லாமல் கிளைச்சபையை சங்கத்தோடு ரிஜிஸ்தர் செய்யவும் ரூ 3 கொடுக்கப்பெற்றபின் ஸ்கூல் மாணவர்களால் ராஜவாழ்த்துப்பாடி சபை கலைந்தது, என்று சங்கத்தலைவர் ஸ்ரீமான் M. மதுரேந்திர நாடார் எழுதுகிறார்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# கல்வி.

(முன் தொடர்ச்சி)

இவ்விஷயம் சம்பந்தமாகப் பெண் கல்வியைப்பற்றிச் சிறிது செப்பல் ஒப்புமேயன்றித் தப்பன்று என நினைக்கின்றேன். புருஷனொருவனுக்கு மனையாட்டி சிறிது கற்றவளல்லாதோர் பெண்மணியாயின், அவன் இல்லறம் நல்லறமாய் முடியும் என்பதற்குச் சற்றேனும் சங்கை இன்று. அன்றேல் அவன்றன் இல்லறம் இல்லறமாயே முடியும். இல்லறமாகிய இரதம் ஆண் பெண் ஆகிய இரண்டு சக்கரங்களாலும் ஒத்து இழுக்கப்படல் இன்றியமையாதது. தவளை தண்ணீருக்கும் கரைக்கும் இழுத்தால் யாது பயன்? இல்லறமாகிய நல்லதோர் முகத்தில் புருஷன் பெண் ஆகிய இரு கண்களும் பிரகாசமாய் இருந்தாலன்றோ முகத்திற்கு லக்ஷணமுண்டு! ஆதலின் கணவன் மனையாட்டி ஆகிய இருவரும் கல்வி மணம் வீசுபவர்களாய் இருத்தல் வேண்டும். அஃதின்றி இருவரில் ஒருவர் படித்து மற்றொருவர் நிரக்ஷரகுக்ஷியாயிருப்பின் ஒரு கண் கண்ணும் மற்றொன்று புண்ணுமுள்ள முகத்தை ஒக்கும். இல்லறம் நடாத்துமிருவரும் எழுத்து வாசனை அறியாதவராயின் அவர் தம் இல்லம் இருகண்களும் பொலிவற்று விளங்கும் முகத்தை நிகர்க்கும்.

நாடார்குல நண்பர்களே! சிறியேன் மீது சிறிது கருணை கூர்ந்து யாவற்றையும் நன்கு கவனிக்குமிடத்து உண்மை தென்படும். நாமோ கல்வியில் மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கின்றோம் என்பதை யாவரும் மறுத்தல் இயலாது. எழுத்து மணமறியாதார் நமக்குள் மிகவும் அதிகம். கல்வி விஷயமாய் நாம் இப்பொழுது சுமார் பத்து வருஷமாகவே தக்க முயற்சி எடுத்து வருகிறோம். கலாசாலைகள் பல ஸ்தாபித்துள்ளோம். உயர்தரபாடசாலைகளும்(High Schools) ஆறும் நடத்தி வருகின்றோம். ஆனால் கந்நல மாணவர்களின் சரிஷதையைச் சிறிது நோக்குமிடத்து விந்தையினும் விந்தையாகவே முடியும். ஒன்றாவது வகுப்பில் நமது பையன்களின் தொகை சுமார் ஐம்பதெனக்கொண்டால், பத்து வருஷங்களில் அதாவது ஒன்றாம் வகுப்பு மாணவன் ஒருவன் VI Form (பத்தாம் வகுப்பு) படிக்கும்பொழுது நமது பையன்கள் ஐந்துக்குமேல் VI Form இல் காண்பது அரிதாகமுடிகிறது. III Form (7-ம் வகுப்பு) வாசிப்பதற்கு முன்பாகவே ஐம்பதில் பாதிப் பையன்கள் கடையை அடைகின்றனர். IV Form படித்து முடிந்தவிட்டு தாய்மார்களின் துற்போதனையாலும் குடும்ப அசௌகர்யங்களாலும் படிப்பை நிறுத்துவிடும் மாணவர்களும் பலருளர். சில சமயங்களில் படித்த வகுப்பிலேயே இரண்டொரு வருஷங்கள் படிக்கவும் சில சிறுவர்களுக்கு நேரிடுகின்றது. இவ்விதமாகப் பற்பல காரணங்களால் சிற்சில பையன்களே S. S. L. C. பரீக்ஷையை முடிக்கின்றார்கள். அவர்களில் பெரும்பான்மையோர் கடைகளில் அமருகின்றனர். ஆயிரமாயிரமாகப் பணத்தை வாரியிறைத்து நடத்தும் நம்மவர்களின் கலாசாலைகள் ஒவ்வொன்றினின்றும் வருஷந்தோறும் குறைந்தது இரண்டொரு மாணவர்களேனும் கல்விக்குக் கல்லூரி (College) செல்லாமை யாவரும் வருந்தத்தக்க காரியமன்றோ? மாணவரிடமிருந்து சம்பளம் சிறிதும் வாங்காது நடத்திவரும் நங்குலக் கலாசாலையிலும் VI Form ல் ஐந்து அல்லது ஆறு பையன்களுக்குமேல் காண்பது கார்த்திகைப் பிறையைக் கண்டாற்போலுளது. என்னே? நம்மவர் பெரும்பான்மையோராய் வசிக்கும் பேரூர் ஒன்றில் இக்கதி என்றால் யாவர்தாம் வருந்தார்? கல்வி முன்னேற்ற விஷயமாய் சிவகாசி நம் குலாபிமானிகள் செய்துவருகிற பேருபகாரத்தை ஈண்டு குறிப்பிடாமல் விடுதல் அடாது, இவ்வருடம் நங்குலச் செல்வர்கள் நான்கு மாணவர்களைத் திருச்சினாப்பள்ளிக் கல்லூரி ஒன்றிற்கும், சில மாணவர்களைத் தஞ்சாவூர் Training School க்கும் தமர் மகமைப் பணத்தினின்றும் அனுப்பியிருத்தல் அபிமானிகள் யாவரும் போற்றற்பாலது.

சகோதரர்களே!

மேற்கூறியன அனைத்தையும் நன்கு மனதிற்கொண்டு, நம் குலத்தை முன்னேற்றுங் கருவியாகிய கல்வியெனும் பொற்றொனைப் பொருளை நம் மாணவர் மாட்டு விருத்திசெய்யும் வழியைத்தேட வேண்டுகின்றேன். நமது சங்கத்தாரும் தலைக்கட்டு வரியிற் பெருந் தொகையை கல்வி நலம்பொருட்டு செலவு செய்யின் நங்குலம் பத்து வருடங்கட்குள் முன்னேற்றமாகிய பெரும் பந்தயத்தில் பொலிவுற்று விளங்கும் என்பது எனது கருத்து.

நம்மனோர் வசிக்கும் ஒவ்வொரு கிராமங்களிலும் ஆடவர்களும் பெண்களும் கற்கக் கலாசாலைகளை ஸ்தாபிப்பது தலைவர்கள் கடமையாகும். ஏழை மாணவர்களுக்கு இலவசமாகக் கல்விச் சுவையை ஊட்டுதல் யாவற்றினுஞ் சிறந்த தர்மமாகும். வறுமையாற் பீடிக்கப்பட்ட மாணவச் சிங்கங்கட்குப் பொருளுதவுதலினுஞ் சிறந்தோர் பாக்யம் தனவந்தர்களுக்குப் பிறிதொன்று மின்று. இவ்விதமாகப் பல வகையாலும் நங்குலச் சிறார்கள் கல்விமணமாகிய களபச்சாந்தால் யாண்டும் விளங்கத்திருவால வாயான் திருவருள் புரிவானாக! பொங்கும் மங்களம் எங்கும் தங்குக! சுபம்!

K. கந்தசாமி (கல்லூரி மாணவன்.)

# குடும்பமும் அதன் பயனும்.

மனிதர்களுக்குத் தம் குடும்பத்தினிடத்தில் பற்றுண்டாயிருத்தல் சுபாவமான தன்மையாகும். காட்டு மனிதர்களென்று கூறத்தக்க நாகரீகமற்றவர்களிடத்திலும், உயர்ந்த நாகரீகமமைந்த பேரறிவாளர்களிடத்திலும், குடும்பப்பற்று என்பது இருந்துவருகிறது. மேலும் இக்குணம் மனிதர்களிடமும் காணப்பட்ட உயிர்களாகிய மிருகங்களிடத்தும் ஏற்பதி இருக்கக்காணலாம். எவ்விதமெனில் ஆடு மாடுகள் முதலிய சாதுமிருகங்கள் முதல் புலி சிங்கம் முதலிய கொடிய மிருகங்கள் ஈறாக எல்லா பிராணிகளும் தாம்பெற்ற குட்டிகளிடத்தில் ஓர் விதப்பற்றும் அன்புங்கொண்டு குட்டிகள் பெரியவையாகும் வரையில் உணவை யூட்டி வளர்க்கின்றன. இம்முறையில் குடும்பப்பற்று என்பது சிறிது பாகம் அவைகளிடத்தில் அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது. ஆயினும் இது உயர்ந்த நல்லபற்று ஆகாது. ஏனெனில் மிருகங்கள் தம் குட்டிகள் தம் ஆகாரத்தைத் தாமே தேடும் பக்குவமடையும் வரையில் மாத்திரம் குட்டிகளைப் பரிந்து காப்பாற்றுகின்றன. குட்டிகள் தமது உணவைத்தாமே தேடிக்கொள்ளத் தலைப்பட்டவுடனே தாயும் குட்டிகளும் பிரிந்து போவதுமன்றி ஒன்றுக்கொன்று பிறகு கவனிப்பதேயில்லை. மனிதர்களோவென்றால் அவ்விதமின்றி எக்காலத்தும் தம் மாயுள்பரியந்தம் ஒருவர்க்கொருவர் அன்புபாராட்டி வருவார்கள்.

மேலும் மனிதர்கள் எவ்வகையிலும் தனித்து வாழமாட்டார்கள். பலர் கூடி வாழ்தலே அவர்களின் இயல்பு. இதனைப் பலர் கூடிவாழ முயல்பவர் ஒருவர்க்கொருவர் அன்புபூண்டு சேர்ந்து ஒற்றுமையுடன் இருக்கவேண்டுமென்பது இனிது புலனாகும். ஒருவன் சிறப்பாகத் தன் குடும்பத்தில் அதிகப் பற்றில்லாதவனாயிருக்கலாம். ஆயினும் பொதுவாக அவன் எல்லா உயிர்களிடத்தும் தயை, அன்பு, இறக்கங்காட்டுபவனாயிருப்பான். எல்லாப் பற்றுகளையும் அறுத்தவரென்று கூறப்படும் சந்நியாசிகளும் தம் சுற்றத்தாரென்ற முறையில் அன்பு பாராட்டாது போயினும் பொதுவில் எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுபவர்களாகும்.

இந்த குடும்பம் என்றால் இந்தியர்களாகிய நம்முள் எந்த அர்த்தத்தைக் கொடுக்கிறது? யார் சேர்ந்தது குடும்பமெனப்படும்? என்பதைக் கவனிக்கவேண்டும். நெடுநாட்களாக இந்தியர்கள் அனுஷ்டித்துவரும் முறையில் ஓர் நல்ல குடும்பமென்பது தாய், தந்தை, உடன் பிறந்தோர், மனைவி, மக்கள் ஆகியவர்களின் கூட்டுறவைப்பெற்ற ஒருவனது வாழ்க்கையையே குறிக்கும். இதனால் நெருங்கிய இரத்த சம்பந்தமுடையார் பலர் கூடியதே குடும்ப மெனப்படுகிறதென்பது விளங்குகிறது.

இனி இவ்வித குடும்பத்தால் இவ்விதம் கூடி வாழ்வதால் உண்டாகும் பயன் என்ன? என்பதைப்பற்றி கவனித்தல் அவசியமாகும். பலர்கூடி குடும்பமாக வாழ்ந்தால் ஒருவருக்கு ஏதாவது கஷ்டமுண்டானால் மற்றவர்கள் யாவரும்கூடி அவரது கஷ்டத்தைநீக்க முயலுவார்கள். உதவி செய்வார்கள். ஒருவனுக்கு வியாதியுற்று படுக்கையில் பத்து தினங்கள் படுத்துக் கொண்டானென வைத்துக் கொள்வோம். அச்சமயத்தில் அவனுடைய குடும்பத்தாரனைவரும் பரிந்து அவனுக்குவேண்டிய உதவிகள் செய்யவும் உணவு அளிக்கவும், நோய் நீங்க உரிய சிகிச்சைகள் செய்யவும், தலைப்படுகின்றனர். இது அவர்களது அவசியமான கடமையாகிறது. இதனால் நோயுற்றிருக்கும் மனிதன் .......... ஒருவனுக்கு பெரும் பயன் .......... பின்னும் குடும்பத்தார் ............ யாவரையும் செய்யப்படின் குடும்பத்தில் ஒருவன் தன்னை யொத்த பல மனிதர்களோடு நெருங்கிப்பழக அனுகூலமுண்டாதல். அவ்விதம் நெருங்கிப் பழகுவதால் ஒவ்வொருவருடைய குணம், சுபாவம், இயல்பு இன்னதென்பதை யறியவும் அவ்விதமறிந்து அவரவருக்குத் தகுந்தபடி நடந்து எல்லோருடைய அன்பும், உதவியும் பெறவும். இவ்வகையில் மனித சுபாவ அறிவு வளர்ச்சி பெறவும் சாதகமுண்டாகிறதென பல கூறலாம்.

இன்னும் எல்லோருடைய சுபாவமும் நன்கு அறிந்திருப்பதால் அவர்களுடைய மனம் நோகாதபடி நடந்துகொள்ள ஆசையுண்டாகிறது. அதன்படி நடக்க அவசியம் தலைப்படுகிறான்.

இதனால் குடும்பத்தில் பல கட்டுதிட்டங்களுக்கு உட்பட்டு நடக்கவேண்டியவர்களாகிறோம். இது நமக்குப் பெருந வியாகிறது. எவ்விதமெனில், ஒவ்வொருவரும் தனித்தனி அவரவருக்கு இஷ்டமானபடி ஓர் கட்டுப்பாடின்றி நடக்கத் தலைப்பட்டால். எக்காரியமும் நிறைவேறுது போவதுமன்றி ஒற்றுமையின்றி பலகஷ்ட நஷ்டங்களும் கலகங்களும் விளையலாம் ஆதலால் பலரும் ஓர்வித கட்டுக்குட்பட்டு மூரணின்றி ஒற்றுமையுடன் எக்காரியத்திலும் நடக்கவேண்டுவது முக்கியமென விளங்குகிறதல்லவா? இம்முறையில் குடும்பமானது ஒருவனை இளமையிலேயே ஓர்வித கட்டுப்பாடுக்கு உட்பட்டு நடக்கும் வழக்கத்தை கற்பித்து வருகிறது. இவ்விளமைப் பழக்கம் அவர்களது பிற்காலத்திய உலகவாழ்வில் பெரும் பயனளித்து நிற்குமென்பது சொல்லவேண்டுவதில்லை.

ஒருவனுக்கு அன்பு என்ற ஓர் உணர்ச்சி தோன்றுவதற்கு குடும்பமே மூலகாரணமாம். பிறந்தவுடன் தன்னைப் போஷிப்பவர்களாகிய பெற்றோரிடத்தில் அன்பு என்ற உணர்ச்சி நெகிழ்ச்சி முதலில் ஆரம்பமாகிறது. பிறகு தனக்குத்துணைவர்களாகவும் பலவகையில் உதவி செய்பவர்களாகவும் ஏற்படும் உடன் பிறந்தாரிடத்தும் நேசர்களிடத்தும் அவ்வன்பு விரிந்து பரவுகிறது. எப்பொழுது ஒருவரிடத்து அன்பு நமக்குண்டாகிறதோ அப்பொழுது அவர்களிடத்தன்பு நலம் முதலியவை அருகி அன்பு, தயை, இரக்கம் பொது நலஇச்சைமுதலிய சுகுணங்கள் பிரபலமடைகின்றன. இவ்வகையால் குடும்பமானது, மனிதன் அன்புவளர்ச்சிக்கு ஆஸ்பதமாயிருத்தல் கவனிக்கத்தக்கதாகும். சுபம்.

கற்பகம்.

# விடாமுயற்சி.

முயற்சி என்பது மனிதர்களுக்கு இன்றியமையாத குணங்களில் ஒன்று. நாம் முயன்ற காரியம் சித்தியாகாது போல் தோன்றினும் விடாமல் தொடர்ந்து அக்காரியத்தை திருப்பத்திருப்ப செய்தே விடாமுயற்சி எனப்படும்.

"முயற்சியுடையாரிகழ்ச்சியடையார்" என்ற ஔவையார் முதுமொழியை நன்கு கவனிக்கத்தக்கது. முயற்சியுடன் ஒரு காரியத்தை செய்தலேயோமாகில் அதன் நற்பலனை அடைவோமென்பது நிச்சயம். அங்ஙனமாயின் "அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி, எடுத்த கருமங்களாக" என்றபடி ஆகும் நாளில் தானே ஆகும் அப்படிக்கின்றி, விடாதுமுயற்சி செய்வோமாகில் எங்ஙனம் சித்திபெறும் என்றும் நினைக்கலாம். "தெய்வத்தாலாகாதெனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலிதரும்" நாம் எடுத்துக் கொண்ட முயற்சி நற்காரியங்களாயிருந்து அவற்றில் விடாமுயற்சியுடன் உழைப்பின் தெய்வசகாயமில்லாவிடினும் முயற்சியால் நற்பலனையடைவோமென்பது நிச்சயம். இம் முயற்சியின் மகிமை இன்னதென்றறிந்து அதற்கிணங்க சகலருக்கும் நன்மை பயக்கக்கூடிய முயற்சியிலிறங்குகின்றார்கள். அதாவது சங்கம் ஸ்தாபித்தல் வாசகசாலை ஏற்படுத்தல் அதற்கென பல பத்திரிகைகளை தருவித்தல் முதலிய முயற்சிகளில் பிரவேசித்து புதுக்கடை முன்னுமாதம் பிள்ளையார்கோவில் ஆறுமாதம் என்ற நாட்டுப் பழமொழிக்கிணங்க ஆரம்பத்தில் இல்லாத ஆர்பாட்டங்களெல்லாம் ஆடி, இரவும் பகலும் ஓயாமல் உழைத்து இல்லாதகாரியத்தையெல்லாம் இழுத்துவைத்து இசைபாடிவிட்டு என்றென்றும் கிடைக்கவேண்டிய பலனை அன்றே கிடைத்ததென மகிழ்ந்து தலைகிழாகவும் நடந்துகாட்டி விடுகின்றனர். ஆனால் கொஞ்சநாளில் யாருக்குவந்த விருந்தோவென அயர்ந்து தூங்கிவிடுகிறார்கள். இதற்கெல்லாம்காரணம் விடாமுயற்சியில்லாக்குறைவே. முன்வைத்தகாலை பின்வைக்காத க்ஷத்திரியகுலத்தில் உதித்தும் எடுத்தகாரியத்தை முயற்சியுடன் நடத்தாது பிரகாசம் குன்றிவிடுவது தகுதியா? "முயற்சி திருவினையாக்கும்" "முயற்சியுடையாரிகழ்ச்சியடையார்" என்னும் பெரியார் வாக்கை நன்குமதித்து எடுத்தகாரியத்திற்கு பின்னம் வாராது பிரகாசிக்க செய்வீர்களாக. விழியின்ற முழியின் எடுத்தகாரியம் கைகூடும்வரை உழையின். சிறியாரொழுக்கம் சிறந்தாரும் பழியார்.

A. S. P. சாமி.

நமது மித்திரன்

# போஷகப் பிரபுக்கள்.

பாலக்காடு முனிசிபல் கௌன்ஸிலர் ஸ்ரீமான் க. கு. பொன்னப்ப நாடார்.

அருப்புக்கோட்டை முதலாளி ஸ்ரீமான் மு மு. முத்துக்குமாரசாமி நாடார்.

சென்னை, நீலநூல் வியாபாரம், நாட்டாண்மை ஸ்ரீமான் கா. ஆறுமுக நாடார்.

சென்னை "விநோதவிகடன்" பத்திராதிபர் ஸ்ரீமான் ஆ. ப. வை. கோதண்டராம பாண்டியநாடார்.

திருநெல்வேலி, முனிஸிபல் கௌன்ஸிலர் ஸ்ரீமான் அரி. அ சேண்பக நாடார்.

திருநெல்வேலி ஜில்லா மானூர் தண்டுப்பத்து, மிருஸ்தார் ஸ்ரீமான் சோ சேல்லத்துரை நாடார்

ஸ்ரீமான் சி. பொ. ம. பொன்னையா நாடார் அன் பிரதர்ஸ் 26-நிர் நாரீஸ்ரோடு கொழும்பு.

ஸ்ரீமான் மா. நா. ரு. நாராயண நாடார் திருப்பாப்பு நாடார்விளை திருநெல்வேலி ஜில்லா, (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் வே. சுடலைமாடநாடார், சிறுநாடன் குடியிருப்பு திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் நா. ஆறுமுகநயினர் நாடார், பெரியகண்டம்வடலி திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் இ. அய்யங்கண் நாடார், சிறுநாடன்குடியிருப்பு திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் சு. குருஸ்வாமி நாடார், சிறுநாடன்குடியிருப்பு திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் ஞா. யோசேப்பு நாடார் உடையார்குளம் திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection